திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9   23—9—55 : வெள்ளி : : விலை 3 அணா   மலர் : 6

நேரு பண்டிதருக்கு நினைவூட்டுகிறோம்.

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள் தமிழகத்தில் அக்டோபர் திங்கள் 2-ம் நாளிலிருந்து ஏறத்தாழ ஒரு வாரம் வரை புயல் வேகத்தில் சுற்றுப் பயணம் செய்யப் போவதாக தமிழ் நாட்டுக் காங்கிரஸ் முகாமிலிருந்து அறிக்கைமேல் அறிக்கை வெளிவருகின்றன! அதிலும் இம்முறை நேரு பண்டிதர் சுவர் மீது (சென்னைக் கோட்டை மதில்சுவர்) நின்று கொண்டு கர்ஜனை புரியப் போகிறாராம்! இந்த அளவுக்கு சுற்றுப் பயணத்தில் ஈடுபட யிருக்கும் இந்தியப் பிரதமர், தென்னாட்டு மக்களின் மனக்குறை — அவலநிலை ஆகிய வைகளைப் போக்கும் திட்டத்துடன் அதற்கான விவேகத்துடன் வருகிறாரா அல்லது ஆளும் வர்க்கம் என்ற நிலையிலிருந்து திராவிடத்தின் உரிமையாளர்களை வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்தும் முறையில் தடிப்பான வார்த்தைகளை அள்ளி வீச தென்னாட்டைத் தேடி ஓடி வருகிறாரா என்பதும் தெரியவில்லை.

தேசிய முகாமைச் சார்ந்த சிலர், பண்டிதரின் வருகை தமிழ் நாட்டில் நடைபெறப்போகும் நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்கள் மண்ணைக் கவ்வாமலிருப்பதற்கு ஒரு காட்சி போல பயன்படுத்திக் கொள்வதைத் தவிர வேறொன்றும் முக்கியத்துவமில்லை யென்று கூறுவதாகவும் அறிகிறோம்,

எது எவ்வாறாயினும் தென்னாட்டுக்கு வருகை தரும் நேரு பண்டிதர் அவர்களுக்கு நாம் முன்னதாகவே சில உண்மைகளை எடுத்துக்கூற விரும்புகிறோம். இந்தியப் பிரதமர் நமது எடுத்துக் காட்டுடைய சற்று அரசியல் யூகத்துடன் சிந்தித்து தமது சுற்றுப் பயணத்தை இனிதே முடித்துச் செல்லுவார் என்றும் நம்புகிறோம்.

தென்னாட்டு மக்கள் அனைவருக்கும் ஏன், எல்லா கட்சியினருக்கும் இன்று பொதுப் பிரச்னையாக அதுவும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்னையாக யிருப்பது தனி அரசு உரிமையே யாகும், இதற்கான காரண காரியங்களை திராவிட முன்னேற்றக் கழகம் திட்ட வட்டமாக அவ்வப்போது எடுத்துக் கூறி வந்திருப்பதை ஆட்சி பீடத்திலுள்ள அனைவரும் அவர்களைவிட மிகத் தெளிவாக இந்தியப் பிரதமரும் அறிந்திருப்பார்கள் என்பதிலும் நமக்கு ஐயப்பாடில்லை.

இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் பெற்று எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் தென்னாட்டு மக்களிடம் அன்று—1947-ம் ஆண்டுவரை தேங்கி யிருந்த வறுமையும் மற்ற பல தொல்லைகளும் அகன்றபாடில்லை, இன்னும் சொல்லப்போனால் அந்தத் தொல்லைகள் மேலும் மேலும் வளர்ந்து வருகிறதேயல்லாது வேறில்லை.

நாம் கூறும் இந்த குற்றச்சாட்டை நாலைந்து திங்களுக்குமுன் பக்ரா-நங்கல் அணைக்கட்டினைப் பார்வையிடச் சென்ற போது இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்களே மனமார ஒப்புக்கொள்ளும் வகையில் பேசியிருப்பதை இங்கு நினைவூட்டுகிறோம். எனவே எட்டு ஆண்டு சுதந்திர ஆட்சியில் வடநாடு வளம் பல பெறவும் தென்னாடு ஏற்கனவே யிருந்த நிலையினும் கீழாகச் செல்வதுமான "தர்பார்"தான் நடத்தப் பட்டுவருகிறது ஏக இந்தியா என்ற பெயரால்!

சென்னை சர்க்கார் மட்டுமல்லாமல் ஆந்திரம், மைசூர், திருவிதாங்கூர் சர்க்காரும் அவ்வப்போது மத்திய சர்க்காரை நோக்கி மண்டியிட்டு வரம் பெற வேண்டிய நிலையிலிருக்கிறார்கள் என்பதுடன் சில சமயங்களில் தங்களையும் மறந்து மத்திய சர்க்காரின் ஓரவஞ்சனையையும் எடுத்துக்கூறி புலம்பிவருவதை நாம் கண்டுவருகிறோம்.

எனவேதான் இந்தியப் பேரரசின் பிடியில் சிக்கி ஏறத்தாழ ஓரேமாதிரியான இன்னல்களைத் தாங்கி நிற்கும் தென்னாட்டினர் மனதில் நாட்டுப் பிரிவினைக் கொள்கை வேரூன்றி வளர்ந்து வருகிறது, இவ்வித மகத்தான ஒரு

நக்கீரன்

பிரச்னையை நேர்மைப் பண்புடன் தீர்த்துவைக்க நேரு பண்டிதருக்கே மனமில்லையெனில் மற்ற வடநாட்டுத் தலைவர்களிடம் அந்தப் பண்பினை எதிர்பார்க்க முடியுமா என்றே ஐயப்படுகிறோம்.

திராவிடத்தின் உரிமைப் பிரச்னையான மொழிவழி மாநிலங்கள் கொண்ட திராவிட நாட்டுக் கூட்டாட்சி அமைப்பைத் தட்டிப்பறிக்கும் வகையில் "தட்சிணப் பிரதேசம்" என்ற பேரால் வடநாட்டு ஆதிக்கச் சுரண்டலுக்கு மேலும் தென்னாட்டில் வழிவகை செய்துகொள்ள எண்ணும் திட்டத்திற்கு நேரு பண்டிதர் தமது தென்னாட்டுச் சுற்றுப் பயணத்தில் வலை வீசப் போவதாகவும் தெரியவருகிறது;

தென்னாட்டு தேசியத் தோழர்கள் தேர்தல் காலங்களில் முன்பெல்லாம் காந்தியாரை பவனி வரச் செய்து தங்களின் வெற்றியைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலையிலிருந்தார்களே, அதிலிருந்து இன்னும் ஓரளவு கூட அரசியல் துறையிலே தன்மானம் பெறவில்லை, ஆதலாலே இப்போது நேரு பண்டிதரை பவனி வரச் செய்து தேர்தலில் ஒரு கை பார்த்து விடப் போகிறார்கள் என்று சொல்லப்படுமானால் அதைப் பற்றிக் கூட நாம் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டோம்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமும், ஏனைய கட்சிகளும் ஒருமித்த குரலில் நினைவூட்டி எச்சரித்து வரும் மொழி வழி மாநில அமைப்புக்கும் அவைகளை நேசப்பான்மையுடன் ஒன்றுபடுத்தும் திராவிட நாட்டுக் கூட்டாட்சி அமைப்புக் கொள்கையினையும் தமது சுற்றுப் பயணத்தில் கோட்டை சுவர் மீது நின்று பேசி சிதறடித்து விடலாம் என்று நேரு பண்டிதர் அவர்கள் கருதுவாரேயானால் வடநாட்டு ஆதிக்கம் கொண்டுள்ள அந்த நப்பாசை தான் குப்புறக் கவிழுமேயல்லாது, திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள நேர்மையான உரிமைப்பிரச்சனை—திராவிட நாட்டுப் பிரிவினை— அந்த மகத்தான கொள்கையை சிறிதும் அசைத்து விட முடியாது என்பதை பணிவுடன் எடுத்துக் காட்டுகிறோம்.

எனவே வடவர் தென்னவர் என்ற மனக் குரோதம் மேலும் வளராமல் தடுக்கவும், இருசாராரும் என்றென்றும் நேசப்பான்மையுடன் வாழவும், மொழி வழி அடிப்படையில் திராவிடத் தனி அரசு அமைவதற்கான முயற்சிக்குப் பேருதவி புரியவும் அப்பிரச்னைக்குரிய கட்சித் தலைவர்களிடம் உண்மை அறியவும் நேரு பண்டிதரின் சுற்றுப்பயணம் பயன்பட வேண்டுமென ஆசைப்படுகிறோம்.

அதை விடுத்து அகில உலக நாடுகளில் தனக்குக் கீர்த்தியும் கித்தாப்பும் வளர்ந்து வரும்போது என் ஆளுகைக்குட்பட்ட இத்தென்னாட்டவர்கள் தனி நாடு கேட்பதாவது — நான்சென்ஸ் என்று நேரு பண்டிதர் நாநர்த்தனம் புரிவாராகில், உலக நாடுகளிடையே காணப்படும் குறைபாடுகளை அறிய முடிந்த ஆசியாவின்ஜோதி நேரு பண்டிதர், உள்நாட்டில் — திராவிடத்தில் வளர்ந்துவரும் சுதந்திர உணர்ச்சியை மதிக்கும் நடக்கும் மனவளம் பெறுத தானது மதோன்மத்தர்கள் வரிசையிலே நேரு பண்டிதரின் ஆட்சி நடைபோடுகிறதே யன்றி மதி நிறைந்த நல்லாட்சியாக இயங்கவில்லை யென்று வருங்காலம் இடித்துக்கூறும் என்பதையும் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்களுக்கு வணக்கத்துடன் நினைவூட்டுகிறோம்.

தலைமைக் கழகம்: அறிக்கை—29/55

பொறுப்புக்கள் பகிர்வு

தலைமைக் கழகப் பொறுப்புக்கள் கீழ்க்கண்டவாறு பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், ஆகிய இருவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டுச் செயலாற்றப் பெறும் :—

பொதுச்செயலாளர் ஏற்று நடத்தும்பொறுப்புக்கள் :

தலைமை நிலையம்	நிதி வரவு-செலவு
'நம் நாடு' இதழ்	கொள்கைப் பரப்பல் (பிரச்சாரம்)
கொள்கை—திட்டம்	
பொதுக் குழு	கலைத் துறை

★

துணைப்பொதுச் செயலாளர் ஏற்று நடத்தும் பொறுப்புக்கள் :

சட்ட திட்டம்	கழகத் தேர்தல்
உறுப்பினர் சேர்த்தல்	மாநாடு அமைப்பு
கிளைக் கழக அமைப்பு	தொழிற் சங்க அமைப்பு

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர், தி. மு. க.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப் பித்தன்

29

இந்நூற்றாண்டின் துவக்கத்தில் திராவிட நாட்டுக் கல்வி வளர்ச்சியானது படிப்படியே முன்னேறிக் கொண்டிருந்தது எனக் கூறலாம். 1910-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முதன் முதலாக எஸ். எஸ். எல். சி. பரிட்சை துவங்கப்பட்டது இப்பரிட்சையானது சென்னை மாகாண உயர்தரக் கல்வி சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்திவிட்டு தனக்கே உரியதொரு புகழைப் பெற்றுள்ளது. 1913-ம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் செய்த காரியங்களுள் தமிழ் அகராதி (Tamil Lexicon) ஒன்று தொகுப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் அளித்ததும் குறிப்பிட வேண்டியதாகும். தவிர சென்னைப் பல்கலைக் கழக நூல்நிலையத்திற்கென கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டதும் அம்முடிவை சர்க்கார் ஒப்பியதும் பல்கலைக் கழக சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவமாகும், இக்காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள விகிதம் உயர்த்தப்பட்டதானது ஆரம்பக்கல்வி சரித்திரத்தில் முதலிடம் பெறுவதாகும். சென்னையில் பெண்களுக்கென புதிய கல்லூரி யொன்று இருத்துவப் பெண்கள் கல்லூரி என்ற பெயரில் நிறுவப்பட்டதும் முக்கிய நிகழ்ச்சியாகும். திராவிட மொழிகளில் சுருக்கெழுத்துப் (Short-hand) பரிட்சை நடைபெறத் துவங்கியதும இக்காலத்தில்தான். கட்டாய ஆரம்பக் கல்விக்காக கோகலே அவர்கள் இந்திய சட்டசபையில் முயற்சி

டர் சி. நடேசனார் அவர்கள். திராவிட மாணவர்கள் துவக்கக் கல்வியிலிருந்து உயர்தரக் கல்விவரை பட்டமும் புகழும் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற குறிக்கோளும் ஒரு அடிப்படை காரணமாக அமைந்திருந்தது அவர் கண்ட திராவிடர் சங்க அமைப்பில். திராவிடர் சங்கமானது அரசியல் துறையில் மட்டுமல்லாது வேறு பல துறைகளிலும் கூட திராவிட மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு 1912-ல் டாக்டர் நடேசனாரால் துவக்கப்பட்டதாகும்' மொழி, இலக்கியம், மதம், சீர்திருத்தம் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி அவைகளில் வல்ல அறிஞர்

வாய்த்தபோதெல்லாம் பார்ப்பன வகுப்புகட்கும் காங்கிரஸ் முகாமினருக்கும் சவுக்கடி கொடுத்து வந்தார். தம் இனத்தை ஓம்பும் அரும்பெரும் காரியமே கண்ணு யிருந்து வந்தார். பார்ப்பனர்களின் பக்கம் நின்று கூச்சல் போடுவதற்கு காங்கிரஸ் என்ற அமைப்பு இருந்து வருவதுபோல திராவிடர்கட்கும் ஒரு அரசியல் அமைப்பு தேவை என்பதை உணர்ந்த டாக்டர் நடேசனார் சர் தியாகராயரையும், டி. எம். நாயரையும் கொண்டு நீதிக்கட்சி 'அமைப்பதில் வெற்றியடைந்தார். 1916-ம் ஆண்டு நவம்பரில் நீதிக்கட்சி உருவாயிற்று. இந்தக் காலத்தில்தான் அன்னிபெசன்ட் அம்மையார் தமது

திராவிடர் கல்வி நிலையும் -- நீதிக்கட்சியின் முதல் முழக்கமும்

களின் உதவியைக் கொண்டு இத் திராவிடர் சங்கம் தொண்டாற்றி வந்தது. திராவிட மாணவர்கள் தங்கியிருந்து தமது கல்வியை சரிவர பெற்று வருவதற்கு வசதியாக இருக்க வேண்டியே டாக்டர் நடேசனார் திராவிடர் இல்லம் என்ற அமைப்பை நிறுவினார். இவ்வமைப்பு முறை சென்னை நகரில் மட்டுமின்றி மற்ற நகரங்களிலும் துவக்கப்பட்டு புகழ்பட நடத்தப்பட்டு வந்தது. டாக்டர் நடேசனாரின் இவ்வரும் முயற்சிக்குத் திராவிடத்தின் தலைசிறந்த தலைவர்களான டாக்டர் டி. எம். நாயர், சர் பிட்டி தியாகராயர், ராமராய நிங்கார் (பனகல் அரசர்), சர் கே.வி. ரெட்டி முதலியவர்கள் ஆதரவு தந்தனர். தாமும் அந்த அமைப்பில் அங்கமேற்று பணியாற்றினர், கவர்னர்களும் சட்டமன்ற

ஹோம்ரூல் இயக்கத்தைத் தீவிரமாக நடத்ியதும், அகற்த திராவிடநாட்டுப் பார்ப்பனர்கள் ராஷ்டம் போட்டதுமாகும். தேசியக் கல்வி என்னும் பெயரால் கூச்சலெழுப்பி மாணவர்களை பள்ளி பகிஷ்காரம் செய்யும்படியும் அரசாங்கத்திற்கு எதிராக கிளம்பும்படியும் ஹோம் ரூல் லீக் பார்ப்பனர்கள் தூண்டிவிட்டனர். ஆனால் அரசாங்கத்தினரோ மாணவர்களை எச்சரித்து அறிவுரை பகன்றனர், மாணவர்களும் தம் கடமை உணர்ந்து நடந்து கொண்டனர். ஹோம் ரூல் விஷமிகளின் தலைவர்கள காவலில் வைக்கப்பட்டனர். இப்படியெல்லாம் தம் சமுதாய நலத்திற்காக பார்ப்பனர்கள் கிளர்ச்சிகளும் பகிஷ்காரங்களும் செய்து வந்ததை நீதிக் கட்சியினர் கண்டு திராவிடர்கட்கு தொண்டு செய்ய முனைந்ததில்

னேற்றம் அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதை எவரும் மறுத்துக் கூறவில்லை பழங்கால முதலே ஒரு அநாகரிக முறை நிலவி வருகிறது. இந்த சமுதாயத்திலே பார்ப்பனர் உயர்சாதியினர் மிகப் புனிதமான பிரிவினர் என்றும், மக்கட்கு கடவுளர்களின் ஆசியையும் அன்பையும் பெற்றுத் தருதற்கு பார்ப்பனர்களே தெய்வீக அனுமதி பெற்ற தரகர்கள் என வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் நிலைபெற்றுவிட்டது. இந்த சம்பிரதாயத்தில் பிறவகுப்பு மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுவிட்டனர். இவர்களின் இப்படிப்பட்ட நம்பிக்கை காரணமாக உடலுழைப்பினின்றும் பார்ப்பனர்கள் தம்மை விடுவித்துக் கொண்டுவிட்டார்கள். இவைகள் யாவும் புராண இதிகாசங்களில் இருந்து வந்தவர்களென்றாலும் இன்றைய பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலும் அம்முறை வெகுவெற்றிகரமாக புது அமைப்புடன் நிலவி வருகிறது. ஆனால் திராவிட மக்களின் நிலைமை என்ன? விவசாய வேலையில் ஈடுபட்டு அதுவே கண்ணியமும் செல்வாககும் தரும் என நம்பி மோசம் போயுள்ளனர். கல்வி கற்பதை விட்டொழித்து தற்குறி நிலையில் உள்ளனர் அவர்களது கண்ணிய உழைப்பானது இம்மாகாணம் செல்வ வளம் பெற்று வளர்ச்சியடைய உதவிசெய்து வருகிறது. இப்படியெல்லாம் மாகாண வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் உதவிவரும் பெருவாரி மக்கள் ஏதும் அற்றவர்களாக கணக்கிடப்பட்டு விடுவதா? சரித்திரம் அறியாத கால முதற்கொண்டு இந்த நிலைமையில் வாழ்ந்து வரும் திராவிடர்களுக்கு சர்க்காரின் ஆதரவு காட்டப்பட வேண்டாமா? கல்வித் துறையில் பார்ப்பன சாதிகட்குமட்டுமே என்றும் உரிமை கொடுக்கப்பட்டு வருவதா? என்று அரசாங்கம் கண்விழித்துத் தெளிவு பெறும்படி முழக்கமிட்டது சர் பிட்டி தியாகராயர் பெயரில் வெளியான நீதிக் கட்சியினரின் முதல் முழக்கம். அதேசமயத்தில் திராவிடர்கட்கும் நேரடி வேண்டுகோள் ஒன்றும் விடுத்தது அம்முதல் அறிக்கை.

பார்ப்பனரல்லாத தலைவர்கள் விழிப்படைந்து செயலாற்ற வேண்டுமாய்

திராவிடர்கட்கு டாக்டர் சி. நடேசனார் கல்வித் தொண்டு

செய்த விவரங்கள் சென்ற வாரமே கூறப்பட்டுள்ளன. கல்வி வளர்ச்சியைப் பற்றிக் கூறிவரும்போது அக்காலத்து அரசியல் நிலைமையையும் கூறவேண்டியது அவசியமாகிறது. கல்வித் துறையில் அரசியல் தன் வலிமையைக் காட்டத் துவங்கிவிட்டதே இதைக் குறிப்பிட வேண்டியதற்கான காரணமாகும்.

சென்றவாரமே நாம் கூறியுள்ளோம் கல்வித் துறையில் பார்ப்பனர்கள் முன்னேற்றமடைந்திருந்தது பற்றியும் திராவிடர்கள் பிற்போக்கில் தங்கிவிட்டது பற்றியும். மக்களுக்கு நன்மை செய்வதாகக் கூறி காரியமாற்றிய தேசியவாதிகளோ முற்போக்கடைந்திருந்த பார்ப்பனர்களுக்கே சாதகமாக நின்று வந்தனர். பிற்போக்கில் நின்று அவதிப்பட்ட திராவிடர்களைப்பற்றி சிறிதேனும் கவலைப்படவேயில்லை தேசியவாதிகள், திராவிடர்களைப்பற்றிக் கேட்பாரோ பார்ப்பாரோ இல்லாமலே யிருந்து வந்தது, திராவிடரின் இவ்விரங்கத்தக்க நிலையை முதல் முதல் உணர்ந்தார் ஒரு பெரியார். அவர்தான் திராவிடத்தந்தை டாக்டர் சி. நடேசனார் அவர்கள். கல்வித் துறையை மிக முக்கியமாகக்கருதி அதில் நாட்டம் கொண்டு திராவிடர் நலனுக்காக உழைக்க முன்வந்த தலைசிறந்த பெரியார் டாக்டர் நடேச முதலியார் என்பதை திராவிட உலகம் நன்கறியும். திராவிட மாணவர்களின் நலனை எண்ணியும், அவர்களது கல்வி முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டும், அவர்களது சமுதாய அந்தஸ்தும் அரசியல் அந்தஸ்தும் உயர வேண்டும் என்ற ஆவலை மனதில் கொண்டும் அரும்பெரும் கல்விப்பணி ஆற்றியவராவார் திவான்பகதூர் டாக்

உறுப்பினர்களும் அதிகாரிகளும் திராவிடர் இல்லத்தின் சேவையைப்பாராட்டினர். ஆக்கமும் ஊக்கமும் தந்தனர்.

திராவிடர் சங்கம் திராவிடர் இல்லம் ஆகியவைகள் கண்ட ஸ்தாபனத் தலைவர் என்ற முறையில் ஆண்டு தோறும் கல்லூரிப் பட்டம் பெற்ற திராவிட மாணவப் பட்டதாரிகளுக்கு டாக்டர் நடேசனார் விருந்தளித்து புகழுரையும் நல்லுரையும் பகன்று ஊக்கமும் உற்சாகமும் அளித்து பாராட்டு வழங்குவதை வழக்கமாகக் கொண்டார். ஆண்டுவிழா விருந்துக் கூட்டங்களில் கூடும் பட்டதாரி மாணவர்களுக்கு திராவிட உணர்ச்சியையும் வீரத்தையும் ஊட்டி பார்ப்பனர்களுடன் போட்டியிட்டு முன்னுக்கு வரும்படி ஊக்குவித்து அவர்களிடையே சுயமரியாதை உணர்வு பொங்கியெழச் செய்தார்.

திராவிடர்களின் இப்படிப்பட்டதன் முயற்சிக் காரியங்களைக் கூட குரோதக் கண்கொண்டு பார்த்தனர் அன்னிபெசன்ட் அம்மையாரும் அவரது சிஷ்ய கோஷ்டியான பார்பபனர்களும். திராவிட மாணவர்களின் இவ்விழாக் கூட்டங்களை வகுப்புவாதக் கூட்டம் என்று கூறி தம் பொறுமைப் பேய்க் குணத்தைக் காட்டினர் பச்சை வகுப்புவாதிகளான அப்பார்ப்பனர்கள். ஆனால் பிராம்மணர் சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டு தம் சமுதாய மாணவர்களைப் புகழ்ந்தும் தட்டிக் கொடுத்தும் வருவதில் தவறாத அந்த வகுப்பு வெறியர்களின் கூச்சலை யார் கேட்பார்கள்! இக்கயவர்களையா பொருட்படுத்துவார் டாக்டர் நடேசனார்! சமயசந்தர்ப்பம்

வரி கொடுக்கும் திராவிடர் தற்குறி -- ஓசியில் படிக்கும் பார்ப்பனர் பட்டதாரியா ?

என்ன ஆச்சர்யம் இருக்க முடியும்.

ஹோம் ரூல் கிளர்ச்சிக்காரர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி வந்ததை திராவிட மக்கட்கு பகிரங்கப்படுத்தி அவர்களது வலையில் விழாது தடுத்தனர் நீதிக்கட்சியினர். திராவிட சமுகத்தினரின் அவலநிலையை பயன்படுத்திக் கொண்டு தாம் முன்னேற்றமடைய ஆரிய சமூகத்தினர் துடிதுடித்த உண்மையை திராவிட மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளும்படி செய்தனர் நீதிக் கட்சியினர், கல்வித் துறையில் நிலைத்துவந்த அவர்களது ஏகபோக உரிமையையும் அரசாங்க உத்தியோகங்களில் அவர்களே ஆதிக்கம் செலுத்தி வந்த உண்மையையும் திரா மக்கள் அறியச் செய்வது நீதிக் கட்சியினரின் தலையாய கடமையாக இருந்தது. ஹோம் ரூல் வீகரின் தேசியக் கல்வி கோஷ்டம் வெற்றி பெறுமேயாயின் பார்ப்பனர்களின் தனி உரிமை ஆதிக்கமே மேலோங்கி நிற்கும் என்னும் உண்மையை புள்ளிவிவரங்களுடன் திராவிட மக்கட்கு எடுத்துக்காட்டி திராவிட மக்களின் பாதுகாவலராக தொண்டுபுரிந்து வந்தனர் நீதிக்கட்சியினர். நீதிக் கட்சியினர் திராவிட மக்கட்கு எடுத்துக் கூறிய பல உண்மைகளில் கல்வித் துறையைப் பற்றியவையே மிகுதியாகும்.

இம்மாகாண மக்கட் தொகையில் பார்ப்பனர் சிறு அளவினரே. ஆயினும் பல்கலைக்கழக பட்டத்தகுதிகளில் இதர வகுப்பினர்களைவிட அவர்களே முன்

கேட்டுக் கொள்கிறோம்; அவர்கட்கு முன்னுள்ள பிரச்னை பெரிது. சிக்கல் நிறைந்தது, முதலில் திராவிடர்கள் தம்தம் பையன்களையும் பெண்களையும் பெருவாரியாக இதுவரை செய்ததைவிட இன்னும் அதிகமாக கல்விக்கூடங்கட்கு அனுப்பி கல்வி பயிற்றுவிக்க வேண்டும். பொறுப்புள்ள தலைவர்கள் தங்கள் பகுதிகளில் சங்கங்கள் கண்டு திராவிடர் நலனிற்கு தொண்டாற்றி வரவேண்டும். கிடைக்கக்கூடிய கல்வி வசதிகள் யாவற்றையும் எல்லா திராவிட சமூகத்தினரும் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதுமட்டோடு நில்லாது தகுதியும் திறமையும் மிக்க ஏழை எளிய மாணவர்கட்கு கல்வியளிக்க போதுமான நிதிதிரட்டி உதவி புரிய சங்கங்கள் முயற்சி எடுத்துக்கொள்ளல் வேண்டும். உண்மையைக் கூறின் திராவிட மக்கட்கு அதிமுற்போக்கானதொரு கல்வித் திட்டம் நீண்டகால தேவையாக இருந்து வருகிறது. சர்க்கார் இனியும கண்மூடி மௌனம் சாதிக்க முடியாது. சர்க்காரின் கவனம் பெரும் அளவில் இழுக்கப்படும். ஆனால் பார்ப்பனரல்லாதார் முதலில் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள வேண்டும் என விளக்கமான ஒரு வேண்டுகோளும் திராவிடர்கட்கு விட்டது நீதிக்கட்சி. நீதிக் கட்சியின் இவ்வறிக்கைதான் திராவிடரின் சுதந்திர சாசனமாகத் திகழ்ந்து மக்களுக்கு புத்துணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படுத்தியது.

பஞ்சாபில் மூன்று நாட்கள்

பஞ்சாபில் அந்த ஒரு மணி நேரப் பேச்சு!

பிகாரிலால் என்னை விருந்திற்கு அழைத்துவிட்டு தக்கர்தாசுடன் ஹோஷியார்பூர் சென்று விட்டார். என்னைச் சைகிளில் ஹோஷியார்பூர் செல்லலாம் — இங்கேயே இருங்கள்—இன்னும் சிறிது நேரத்திற்குள் சைகிள் கொண்டுவந்து பிகாரிலால் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்கிறேன்—என்று கூறிவிட்டு ஹேத்ராம் தமது இல்லம் சென்று விட்டார். சுந்தர்பாய் பாட்டியும் அடுப்பங்கரை வேலையைக் கவனிக்க சென்று விட்டார். அச்சமயந்தான் நானும் சந்த்ராம் அவர்களும் தனித்து விடப்பட்டோம்.

நான் எதற்கு பஞ்சாப் சென்றேன்? பஞ்சாப் மாகாணம் முழுமையும் சுற்றித் திரிந்து பார்ப்பதற்காகவா? அல்லவே அல்ல! பின்?...பெரியாரைத் தெரிந்த அப்பஞ்சாப் பெரியார் யார்? அவர் எத்தகையவர்? அவர் பெரியாரைப் பற்றியும், திராவிடர் இயக்கத்தைப் பற்றியும் என்ன அறிந்திருக்கிறார்? என்ன கூறுகிறார்? அவர் சாதி ஒழிப்புச் சம்பந்தமாக என்னென்ன பணியாற்றி இருக்கிறார்?—ஆகியவைகளை நேரிற் கண்டு கேட்டறியவே பஞ்சாப் சென்றேனே ஒழிய வேறு எக்காரணமுமில்லை எனக்கு!

எனக்கு சந்த்ராமிடம் என்ன வேலை? ஓயாத பேச்சு! பேச்சு! பேச்சுதான்! எனவே தனித்து விடப்பட்ட அந்த நேரத்தை தனித்த விஷயங்களைப்பற்றிப் பேசவே ஒதுக்கிக் கொண்டேன். அவரும் அதை மிக மிக உணர்ந்து வரவேற்றார். உரையாடலானோம்!

சந்த்ராம் : திர்வேடம்! பெரியாருக்கும் உனக்கும் என்ன தொடர்பு? பெரியாரிடம் உனக்கு அதிக பழக்க முண்டா? அடிக்கடி சந்திப்பாயா? நேரில் பேசியிருக்கிறாயா?

நான் : அய்யா! சந்த்ராம் ஜீ! பெரியார் அவர்கள் எங்களது சகல உரிமைகளின் பாது காவலர்! எங்களுக்குப் பகுத்தறிவு ஊட்டும் பெரியார் அவர்! சீர்திருத்தம் போதிக்கும் செம்மல் அவர்! சுயமரியாதை உணர்வெழுப்பும் சிங்கம் அவர்! நாட்டுப் பற்று ஊற்றெடுக்கச் செய்யும் நல்ல தலைவர் அவர் காட்டிய வழியில் சென்று நலம் பெற விழையும் பல்லோர்களில் நானும் ஒருவன். அவர் ஆற்றிய எண்ணற்ற சொற்பொழிவுகளைக் கேட்டு, நெஞ்சை அள்ளத் தூண்டிய காதுகள் என் காதுகள். கருத்து மணம் வீசும் கணக்கற்றக் கருத்தோவியங்களைப் பெரியார் **"குடிஅரசிலும்," "பகுத்தறிவிலும்," "விடுதலையிலும்,"** தீட்டிட அவைகளைப் படித்து கிளர்ந் தெழுந்த உள்ளம் என் உள்ளம்.

பெரியாரிடம் நேரடியாகப் பழக்கம் இல்லை. எனவே, கூட்டங்களில் அவரைப் பார்ப்பது, அவரது வீர உரையைக் கேட்பது, என்ற அளவில்தான் அவரை நான் சந்திப்பது.

ஒருதரம் எனது திருமண விஷயமாக அவர் இல்லம் சென்றிருக்கிறேன். அவர் தலைமையில் எனது திருமணம் என்று கூறினேன். மகிழ்வோடு ஒப்பினார்! (அத் திருமண ஏற்பாட்டிற்கு அதுபோது—அதாவது **1948 நவம்பரில்—"திராவிடன்" ஆசிரியர் என். வி. நடராசன் அவர்கள் ஆவன** செய்து தந்ததோடு, பெரியாருடன் எனது இல்லத்திற்கும் வந்து, திருமண ஒப்பந்தப் பத்திரத்தை வரைந்து தந்து, சிறப்புரையும் ஆற்றினார்.) பெரியார் தலைமையில் திருமணம் நடந்தது! அத் திருமணத்திற்குப் பின், சென்னையில் சிந்தாதரிப்பேட்டையில் குடியிருந்த போது, பெரியார் அவர்கள் மீரான் சாயபு வீதியிலிருந்து காலையில் **"விடுதலை"** பணிமனைக்குக் காரில் செல்வார். நான் அது சமயம் காய்கறி வாங்கக் கடைவீதி செல்வேன்! அப்படிப் போகும்போது ஓர் நாள் என்னை நினைவில் கொண்டவராக, பெரியார் என்னைப் பார்த்து கரங்கூப்பினார்! எனக்கு ஒரே அதிர்ச்சி! என்ன இது? அய்யா அவர்கள் நமக்குக் கரங்கூப்புவதா? அதற்குப் பதில் என்கிற முறையிலா நாம் கரங்கூப்புவது? வெட்கிப் போனேன்! அவர் எத்தனையோ முகங்களை அன்றாடம் பார்க்கிறார்! அத்தனை முகங்களையும் அவர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப் போகிறாரா? அதிலும் நம்முகம் அவருக்கு அவ்வளவு அறிமுகமா?—என்று நாம் அவ்வளவு அலட்சியமாக இருந்தது தவறல்லவா என்பதை நினைத்ததுமே அதிர்ச்சி கொண்டேன்! நான் நின்றேன்! வணங்கினேன்! கார் நிறுத்தச் சொன்னார்! நலம் விசாரித்தார். கார் நகர்ந்தது நான் நகர்ந்தேன்! பெரியாரது சிறப்புப் பண்பே பண்பு!—என்று அன்றையவிருந்து நானே வணக்கம் முதலில் சொல்வேன், அது தவிர வேறு பழக்கம் சொல்வதற்கில்லை.

பிறகு ஒரு தரம், வகுப்புரிமை உத்தரவு, "காருண்ய" காங்கிரஸ் சர்க்காரால் எடுபட்டபோது எதிர்ப்பு ஊர்வலம், கடற்

'திருவேடம்'

கரைக் கூட்டம், ஏற்பாட்டிற்கு மீரான் சாயபுத்தெரு பெரியார் இல்லத்தில் பெண்கள் ஆலோசனைக் கூட்டத்திற்கு நானும் எனது இல்லாளும் சென்றிருந்தோம், எங்களைக் கண்டதுமே, அன்று—முழங்கால் ஆற்று வெள்ளத்தையுங் கடந்து. இவர்கள் திருமணத்திற்குப் போனோமே நினைவிருக்கிறதா என்று பெரியார் மணியைக் கேட்டார். மணி அக்கதையை நகைதோன்றக் கூறி முடித்தார்! ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் பங்கு கொண்டோம். அதுபோது பெரியாரிடம் கிடைத்த அப்பேச்சு வாய்ப்பு தவிர வேறொன்றுமில்லை!

சந்த்ராம் : மிக மிக சுவாரஸ்யமாகப் பேசுகிறாய்! நான் உண்மையில் மகிழ்கிறேன்! சரி! அண்ணாத்துரையைச் சந்தித்திருக்கிறாயா? அவரிடம் உனது பழக்கமென்ன?

நான் : ....

சந்த்ராம் : ஏன்? தயங்குகிறாய்? பேசு!

நான் : (உள்ளுக்குள்ளாகவே : பொய்யாவது பேசி விடலாமா? எப்படி அண்ணாவைச் சந்தித்ததே கிடையாது என்று கூறுவது? வாய்ப்பு இல்லை! சந்திக்கவில்லை! ஏன்? உண்மையைச் சொல்வதில் என்ன குற்றம்?—என்று தீர்மானித்தவனாய்). அய்யா! சந்த்ராம்ஜீ! எனக்கே வெட்கமாய் இருக்கிறது இந்த உங்கள் கேள்விக்குப் பதில் சொல்ல! இது நாள் வரை நான் அறிஞர் அண்ணாத்துரையைச் சந்தித்ததே கிடையாது! ஒரு வார்த்தை கூட பேசினது கிடையாது! பெரியாரைத் தொட்டுப் பேசியிருக்கிறேன். கைப்பிடித்து அழைத்துச் சென்றிருக்கிறேன்! "பெரியார் வாழ்க!"—ஒலியை பல கூட்டங்களில் நானே முதலில் துவக்கிவிட்டுக் கூட இருக்கிறேன்! ஆனால் அண்ணா அவர்களின் கிட்டத்தில் கூட நெருங்கியவனன்று! நெருங்கக் கூடாத நெருப்பல்ல அவர்! நெருங்கக் கூடாது என்ற வெறுப்புமில்லை எனக்கு! அபாக்யவான் என்று என்னை எண்ணிக் கொள்கிறேன். இது நாள் வரை அவரைக் காண வாய்ப்பு கிடைக்காதது எனது பெருங்குறைதான்! அவரது பேச்சுகள் எங்களுக்கெல்லாம் இனிய கீதம் ஆனால் இலட்சிய கீதமுங்கூட! அழகு மிளிரும் ஆண்மை வழியும்! 'நயாக்ரா' நீர் விழ்ச்சியென அடுக்கடுக்காக: தட்டுத் தடையின்றி சொற்கள் வந்தது வந்தவண்ணமே இருக்கும்—ஊசலாடும் உள்ளங்களில் உறுதியைப் பிறப்பிக்கும். அறிஞர் அண்ணா பேச்சில் சொக்காதவை கல்லும், மண்ணும், புல்லும்தான்.

சந்த்ராம் : சரி அந்த உனது குறிப்பு புத்தகத்தைக் கொடு...... உன்னிடம் சில நல்ல பழக்கங்கள் இருக்கின்றன. அவைகளில் நான் இதை முக்கியமாகக் கருதுவது இந்தக் குறிப்பு எழுதிவைக்கும் பழக்கந்தான். இதை நான் மிக மிகப் பாராட்டுகிறேன்......சரி! இதைப் படித்துக் காட்டு:

நான் 'Buddhism as a living religion was exiled from India consciously by the efforts of BRAHMIN zealots and revivalists in general, and unconceiously by its being reabsorbed in Hinduism.

"Hindu king Sasangka in 600 A D. cut down the mahabodhi tree, dugup its roots burnt it with fire, and sprinkled it with the juice of sugar cane, desiring to destroy it entirely and not leave a trace behind.

சந்த்ராம் : அது எங்கிருந்து எடுத்தாய்?

நான்: அதைக் குறிக்க விட்டு விட்டேன்.

சந்த்ராம் : அதுதான் முக்கியம்! இனி, யார்? எப்போது? எங்கே? கூறினார்கள்—என்பதையும் விடாமல் குறித்து வை!...... அதில் நிறைய தமிழ் எழுதி வைத்திருக்கிறாயே அவைகள் எதைப்பற்றி?

நான் : பகுத்தறிவுச் சம்பத்தமானவைகளும், சாதி ஒழிப்புச் சம்பந்தமானவைகளும், சீர்திருத்தக்கருத்துகளும் பற்பலப் பெரியார்கள் கூறினவற்றைக் குறித்து வைத்துள்ளேன்.

சந்த்ராம்: சாதியைப் பற்றி வருவதைப் படி!

நான் : "சாதி நோயின் வேரை அறவே கல்ல வல்ல மருந்து கலப்பு மணமே என்பது என் முடிபு:"

—திரு. வி. க. வாழ்க்கை வரலாறு பக்: 778.

சந்த்ராம் : அதன் அர்த்த மென்ன?

நான்: Intcr-caste marriage is the best solution for the eradication of caste!

சந்த்ராம் ; ஆகா! அருமையான வாசகம்! பிறகு!

நான் : சாதி இரண்டொழிய வேறில்லை ......இட்டார் பெரியோர்! இடாதார் இழி குலத்தோர்—அதவது There are only two Castes—High and low—high are those who give and low are those who don't

"சாம்பல் நிறமொரு குட்டி. கருஞ்சாந்து நிறமொருகுட்டி, பாம்பு நிறமொரு குட்டி, வெள்ளைப் பாலினிற மொரு குட்டி—எந்த நிறம் இருந்தாலும், அவை யாவும் ஒரே தரமன்றோ?—இந்த நிறம் சிறிதென்றும், இது ஏற்ற மென்றுஞ் சொல்லலாமோ?"

—பாரதியார்.

அதாவது : A cat gives birth to four different coloured kittens! But for the colours, there are no other distinctions. All are equals In the same manner men on earth are equals. No Brahmin, no

11-ம் பக்கம் பார்க்க

6

காட்சி 14

இடம்...கோயிலின் பின் புறம்

நிலைமை : [காமிராவைத் தாங்கிய கரத்தோடு வீரன் நின்று கொண்டிருக்கிருன். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே பலவேசம் வருகிருன்.]

வீரன் : அடடா! படமெடுக்கத் தயாராயிருந்தேன் ஆனுல், அந்தப் பைங்கிளி பறந்து விட்டதே பலவேசம்!

ப் : ஆமாம் வீரா! நல்ல சந்தாப்பத்தை நழுவவிட்டோம்.

வீ : நீதான் ஆவேச்மா நடந்துட்டே பலவேசம்!

ப : அந்த ஆணவக்காரியின் திமிர்ப்பேச்சு என்னை நிலைமறக்க வைத்து விட்டது வீரா. ஆத்திரப்பட்டு...!

வீ : ஆவேசத்துக்கு ஆளாகக் கூடாது பலவேசம். காரிய வெற்றிதானே நமக்கு முக்கியம். வலையிலே விழயிருந்த புள்ளிமானை வேறு பக்கமாக மிரண்டோட வைத்து விட்டாயே! அந்த சந்தர்ப்பம்...!

ப : நாளைக்கும் கிடைக்குமென நினைக்கிறேன். அப்போது அவசியம்...

வீ : நான் படமெடுத்து விடுகிறேன் பலவேசம். நீ தான் நிதானமாக நடக்க வேண்டும். அந்தக் கோமளவல்லி கோபக் கனலை அள்ளி அள்ளி வீசினுலும் இதயம் இடிந்து விடாதே! சூடான வார்த்தைகளை அந்த மோகனுங்கி வீசும்போது உன் சுந்தர முகத்தை மட்டும் காட்டு! கையிலிருக்கும் பைங்கிளி கொத்தித் துரத்தினுலும் அமைதியே வடிவாகியிரு! இன்று போல நாளையும் நடந்து விடாதே!

ப : ஆமாம் வீரா! சாகசமாகப் பேசிச் சாதித்து விடுகிறேன் காரியத்தை!

வீ : சாகசத்துக்கு அடிபணியாதவர்கள் எங்குமே கிடையாது. இனிக்கும் மொழியிலே இதயக் கருத்தை இதமாக எடுத்துக்கூறு! சீறினுல்—நீயும் நாகமாகாதே... சிரித்துக் கொண்டே மகுடி ஊது அந்தச் சிங்காரிக்கு. பாயும் புலிகூட சின்னஞ்சிறு வலையிலே விழுந்து விடுகிறதே இது எப்படி? எல்லாம் சாகசத்தால்!

*

காட்சி 15.

இடம்...வள்ளியின் வீடு — பகல் நேரம்.

நிலைமை : [பட்டுத்தலையணையிலே பளிங்கு முகத்தைப் பதித்துப் படுத்திருக்கிருள் நடனராணி வள்ளி. ஓசைபடாமல் உள்ளே நுழைந்த பலவேசம், நெளிந்து படுத்திருக்கும் வள்ளியின் முதுகிலே விரல்களைப் பதிக்கிருன். திடுக்கிட்டுத் திரும்புகிருள் வள்ளி]

வ : ஆ! நீங்களா?

ப : ஆமாம் நானே தான். பயந்து விட்டாயா? வேறு யாருக்கு இந்த தைரியம் வரப் போகிறது?

வ : ஏன் வராது?

ப : என்ன வள்ளி...?

வ : இல்லை—அந்தத் தைரியம் எல்லோருக்கும் வரும். ஆனுல், நெருங்கினுல்தான் நெருப்பாகி விடுவே னென்பது எல்லோருக்குமே தெரியுமே!

ப : ஆமாம்! வள்ளி இந்தப்பட்டப் பகலிலே தூக்கமா...?

வ : இரவெல்லாம் விழிச்சிருந்து நாவல் படிச்சேன்; அதனுலே தூக்கங் கெட்டுப் போச்சு.

ப : இரவு முழுவதுமா விழுந்து விழுந்து படித்தாய்?

வ : ஆமாம்! எழுந்து எழுந்து போயி வாசலிலே நின்னு கால்

மா. தங்கவேலர்

கடுக்க உங்களுக்காகக் காத்துக் கிடக்கிறதை விட விழுந்து விழுந்து ராத்திரி முழுதும் படிச்சாலாவது பொழுதுதேயுமேன்னு தான்......அந்த நாவலைப் படிச்சேன்.

ப : நேற்று கால் கடுக்க இந்த ஒய்யாரியைக் காக்க வைத்துவிட்டதற்காகத்தான் இன்று மன்னிப்புக் கேட்க வந்திருக்கிறேனே!

வ : நேற்று நீங்கள் வராததும் நல்லதாய்த்தான் போனது.

ப : என்ன அப்படிச் சொல்லி விட்டாய்?

வ : நாவலைக் கையிலெடுத்துப் படிக்கத் துவங்கியதும் கதையிலேயே மூழ்கி விட்டேன். அப்போது நீங்கள் வந்தால் பாதியிலேயே தானே கதையை நிறுத்த வேண்டி வரும்...அதற்குத்தான் சொன்னேன்!

ப : என்னைவிட அந்த நாவலுக்கு அவ்வளவு மதிப்பா தருகிருய்?

வ : அது நம் வாழ்வுக் கதையாயிற்றே அதனுல்தான் அவ்வளவு பாசம் காட்டினேன். இன்னொரு அதிசயத்தையும் கேளுங்கள். நேற்று படித்த நாவலை இன்று கனவாகவே கண்டு விட்டேன்!

ப : கனவா?

வ : ஆமாம்! ஒரு நடனராணிக்கு ரசிகனொருவன் காதலனுகிருன். போட்டிக்கு இன்னொருவன் நுழைகிருன்......இது கதை! நடனராணியின் நிலையிலே நான்; ரசிகனின் நிலையிலே நீங்கள். போட்டியாக யாரோ? இப்படி கனவு!

ப : அந்தக் காதல் போட்டியிலே வெற்றி யாருக்கோ?

வ : சந்தேகமென்ன—உங்கள் கழுத்திலேதான் வெற்றி மாலை விழுகிறது. பூரிப்பில் நீங்கள் மாலையைப் பிய்த்துக் கொண்டு...

ப : குறும்புக்காரி!

*

காட்சி 16

இடம் : ஆற்றோரம்

நிலைமை : [காதலி ராஜத்தைத் தேடிவருகிருன் மூர்த்தி. மயக்கும் உடைதாங்கி—மான் விழிப் பார்வை வீசி அமர்ந்திருக்கிருள் வள்ளி.]

வ : பொன்னழகரே! இப்போதுதானு வழி தெரிந்தது—விழி திறந்து காத்திருந்தேன். இன்றும் என் இன்ப நிலா தோன்ருதா யென்று ஏங்கியிருந்தேன். பொன் நிலவே! மின்விளக்கே!

மூ : போதும் வள்ளி போதைப் பேச்சைப் பேசித்தான் போர்க்களமாக்கிவிட்டாய் என் உள்ளத்தை நேற்று. இன்றும் என்காதல் பூங்காவிலே தீவைக்காதே போய்விடு!

வ : காதற் சோலையில் கானம் பாடி களிப்பிலாட வந்திருக்கிறேன்—கனலைக் கக்குகிறீர்களே. அமைதியான நேரம்...அழகான நாட்டியமாடிக் காட்டட்டுமா?

(அழகுக்கரங்களை நெளித்து ஆடத் துவங்குகிருள்.)

மூ: வேண்டாம் வள்ளி—வேதனைப்படுத்தாதே என்னை! நீ ஆடவும் வேண்டாம்—பாடவும்வேண்டாம், ஆட்டத்திலே எண்ணத்தைப் பதித்து ஆனந்தக் கடலிலே மூழ்கும் நிலையிலேயா நானிருக்கிறேன். உன் ஆட்டத்தால் என்னை மயக்கிவிட முடியாது.

(ஆட்டத்தை நிறுத்திக் கொண்டே)

வ : நீங்கள் தவவேடந் தாங்கிய விசுவாமித்திரருமல்ல, நான் ஆடிமயக்கும் மேனகையுமல்ல. அழகான நாட்டியத்தால் விசுவாமித்திரர்களைத்தான் மயக்க முடியுமென நம்பிக் கிடப்பவளல்ல நான், உண்மையான கலை நெஞ்சிலே பீடம் அமைக்க நினைத்தேன். ஆனுல் உங்களிடம்கலைக்கு மதிப்புத்தரும் இதயமே இல்லாத போது...

மூ : கலையைப் பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். உன்னைப் போன்ற உல்லாசிகள் கலையைக் கருவியாக்கி வலை வீசுவதைத் தான் நான் வெறுக்கிறேன்!

வ : கலை ஒரு பூஞ்சோலை! அந்தப் பூஞ்சோலையிலே பூத்துக் குலுங்கும் புதுமலர்தான் 'இன்பக் காதல்'.

கலைத் தோட்டத்திலே—காதற் கனியைத் தேடுவது குற்றமா?

மூ : சொந்தத் தோட்டத்திலே கனி தேடுவது குற்றமல்ல...பு கத்துத் தோட்டத்திலே வே தாண்டிக் குதித்து கனி தேடினு ...அதுதான் குற்றம்!

வ : நானும் ஒரு பெண்தானே!

மூ : என்னைக் காதலித்தவள் தேவதையல்ல, அவளும் பெண் தான். அவளுக்குச் சொந்தமான என்னை உனக்குச் சொந்தமாக்கப் பார்க்கிருய்...நீ ஒரு குற்றவாளியேதான்!

வ : அழகான வீணையை ஒருவ மட்டும் மீட்டுவதில்லையே...மீட்டத் தெரிந்த யாருமே......

மூ : வாழ்வு வீணையல்ல—விளையாட்டு பொம்மையுமல்ல—கண்டவரிடம் கொடுத்துவிட்டுத் திரும்பப் பெறுவதற்கு! என் இதயத்திலே ஒருவளுக்குத்தான் இடமுண்டு.

வ : காதல் நெஞ்சம் குரங்கைப் போன்றது... எங்கெங்கோ தாவும், அதற்கு முடிவும்—வரம்பும் கிடையாது. இன்றைய காதலி—நாளை இன்னொருவரின் மனைவியாகிவிட முடியும். இந்தக் கருத்தை மனதில் வைத்துத்தான் நான் உங்களோடு போர் தொடுக்கிறேன்.

மூ : அந்தப் போருக்கு நான் தயாராக யில்லை...அதற்கு இது களமுமல்ல! போய்விடு! நீ வேண்டுமானுல் பலருக்கும் பல திருப்பத்திலே காட்சி யளிக்கலாம்... ஆனுல் என் இதயத்தில் எப்போதும் நடமாடுபவள் என் காதலி ஒருவளேதான்!

வ : ஏன் நான் அழகாக இல்லையா?

மூ : அவள் — என் காதலி... இதய வானிலே பாடிப் பறக்கும் வானம்பாடி! நீயோ வர்ணஜாலங் காட்டும் வானவில்! பனி பதிந்த புது ரோஜா அவள்......போலி வேடம் போடும் காகித ரோஜா நீ! நான் ஓடிஓடித் தேடிப்பிடித்த புதுப்புறு அவள்—நீயோ பாலைவனத்துச் சுடுமணல்!

(கல்லில் சாய்ந்திருந்த கட்டழகி வள்ளி மூர்த்தியை நெருங்கினுள்......அவனே நகர்ந்து கொண்டிருந்தான்.)

(அடுத்த வாரம்)

மறைவு

கொடுங்கையூர் வட்ட தி. மு. கழக செயலாளர் இராகவன், செயற்குழு உறுப்பினர் தோழர் தாஸ் ஆகியோரின் சிறிய தங்கையாரான திரு. எம். முருகம்மா அவர்கள் 15—9—55 காலை5-30 மணிக்கு காலமெய்தியதைக் குறித்து வருந்துகிறோம். தனயர்களுக்கும் குடும்பத்தார்களுக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் என துணைச்செயலாளர் கே. கே. நாதன் அறிவிக்கிருர்.

*

மானுமதுரை கிளைக் கழக அமைப்பாளரும், கழக முன்னணி வீரரும், இராம்நாதபுர மாவட்டத் துணைச் செயலாளருமான தோழர் அ. உ. இராமநாதன் (மானுமதுரை) அவர்களின் தாயார் இராசம்மாள் அம்மையார் 10—9—55-ந் தேதி காலை இயற்கையெய்திவிட்டார்கள் என்ற செய்தி கேட்க வருந்துகிறோம் தாயாரை இழந்திருக்கும் நண்பருக்கும் அன்னரின் குடும்பத்தார்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என மானுமதுரை தி. மு. க. செயலாளர் அறிவிக்கிருர்.

திராவிடன்

சென்னை : 23—9—55 : வெள்ளி

நீதிபதியின் விசித்திர வாதம்!

இந்தி மொழி ஆதிக்கத்தின் தலைவிரி கோலத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட தென்னாட்டிலுள்ள முக்கிய கட்சிகள் அனைத்தும் மொழத்துறை வல்லுனர்களும் கண்டிக்காத நாளில்லை என்றே கூறலாம். இன்னும் சொல்லப்போனால் கல்வித் துறைக்கு முழு அதிகாரமும் பொறுப்பும் பெற்றுள்ள சென்னைப் பல்கலைக் கழகம், ஆந்திரப் பல்கலைக்கழகம் ஆகியவைகள் இந்தி மொழி ஆதிக்கம் ஆழந் தெரியாமல் காலைவிடுமானால் அதனால் தென்னாட்டினரின் பெரும் எதிர்ப்பை இந்தியப் பேரரசே உருவாக்கிய குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்று தக்க ஆதாரங்களுடன் அறிவுறுத்தி யிருக்கின்றனர்.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே. இராமசாமி அவர்கள் அரசியல் சட்டத்தைச் சுட்டிக்காட்டி இந்தி மொழி ஆதிக்கத்திற்கு துணைநிற்கும் பணியில் முனைந்துள்ளதைக் கண்டு மிகவும் வருந்துகிறோம்.

நீதிபதி ராமசாமி அவர்கள் அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேசுகையில்:—

"நமது அரசியல் சட்டத்தில் இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதுபற்றித் தகராறு எழுப்புவதில் எவ்வித பயனுமில்லை;

"எண்ண ஒற்றுமையையும். உள்ள ஒற்றுமையையும் மொழி ஒற்றுமையின்றி ஏற்படுத்த முடியாது;

"நமது வட்டார மொழிகளில் நமக்கு இருக்கும் ஆர்வம், 'ஒரே ஐக்கியமான அங்கமாக அகில இந்தியா இருக்க வேண்டும்' என்ற நமது நோக்கத்தைப் பின் தள்ளிவிடக்கூடாது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சட்டம் என்பது யாருக்காக வகுக்கப்படுவதென்பது நீதிபதி அவர்கள் அறியாததல்ல. மக்களின் ஒன்றுபட்ட தன்மை வளரவும் அவர்கள் மானமுடன் வாழவுமே சட்டம் உருவாக்கப்படுகிறதேயல்லாது சட்டத்திற்காக மக்களின் தன்மான உணர்ச்சி பறிபோக வேண்டும் என்று எவரும் கூறவோ அல்லது வற்புறுத்தவோ இயலாது. அப்படி வற்புறுத்தியவர்களுக்கு காலம் எப்படிப்பட்ட பாடத்தைப் புகட்டி யிருக்கிறது என்பதை அரசியல் வரலாறுகளே எடுத்துக் காட்டி இடித்துக் கூறுகின்றன.

அரசியல் சட்டத்தில் இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக் கொண்டு விட்டதினாலேயே இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள ஏனைய மாநில மக்கள் தங்களின் மொழி உணர்ச்சியை. உரிமையை பலி கொடுக்க வேண்டுமா யென்பதை நீதிபதி கனம் கே. ராமசாமி போன்றவர்கள் சிந்திக்காமல் பேசுவது விந்தையாகவே இருக்கிறது.

'நமது வட்டார மொழிகளில் நமக்கு இருக்கும் ஆர்வத்துக்காக ஒரே ஐக்கியமான அங்கமாக அகில இந்தியா இருக்க வேண்டும் என்ற நோக்கத்தைப் பின் தள்ளிவிடக் கூடாது' என்று வேறு உபதேசம் செய்கிறார் நீதிபதி ராமசாமி அவர்கள்!

அர்த்தமற்றதும் நடைமுறையில் ஒத்துவராததுமான 'அகில இந்திய ஐக்கியம்' என்ற அங்கத்துக்காக நமது வட்டார மொழிமட்டும் பின் தள்ளப்பட வேண்டும் என்று கூறுவது எந்தவகையான நீதியாகும் என்பதைச் சற்று நடுநிலையிலிருந்து சிந்திக்குமாறு நீதிபதி ராமசாமி அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அந்தந்த வட்டார மொழிகளுக்கு ஊறு நேராதபடி இந்திய ஒற்றுமை நிலைபெற்றிருப்பதற்கான வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாதா யென்றும் கேட்கிறோம்.

மற்ற பிரச்னைகளுக்கெல்லாம் சட்டத்தைத் திருத்த முற்படும் இந்தியப் பேரரசு, பிற மாநில மொழி வளர்ச்சியிலும், உரிமையிலும் வேறுமொழி ஆதிக்கம் குறுக்கிடாதவாறு சட்டத்தைத்திருத்துவது பிரமாதமான காரியமுமல்ல!

அந்நிய ஆதிக்கம் என்று சித்தரித்துக் கண்டிக்கப்பட்ட பிரிட்டிஷ் ஆட்சியின் சட்டமே, இந்தியத் துணைக்கண்ட மக்களின் உரிமை வேட்கைக் கேற்ப அவ்வப்போது திருத்தப்பட்டிருக்கிறதென்றால், இந்தியர் அனைவரும் பாரத நாட்டு மக்கள் என்று பசப்பும் நேரு சர்க்கார், தாம் வகுத்துக்கொண்ட சட்டத்தைத் திருத்திக் கொள்ள முடியாதா யென்று கேட்கிறோம்.

ஆகவே சட்டத்தைக் காட்டி தென்னாட்டு மக்களின் மொழி வளர்ச்சிக்கு கேடு பயப்ப எண்ணுவது அரசியல் நாகரீகத்துக்கு ஏற்ற செயலாகாது என்பதே நமது தாழ்மையான எடுத்துக் காட்டாகும்.

மனமிருந்தால் மார்க்கம் புலப்படும். அவ்வித மனவளம் பெறுமாறு இந்தியப் பேரரசுக்கு அறிவுரை கூறவேண்டிய நீதிபதி கனம் ராமசாமி போன்றவர்கள் அதற்கு நேர்மாறான விசித்திர வாதங்களைக் கொட்டி அளப்பதில் பயனில்லை என்பதையும் அறியவேண்டுகிறோம்.

திராவிடன் வேண்டுகோள்

திராவிடன் 2 வாரங்களாய் (ஓராண்டுக்கு முன் வெளிவந்ததைப் போன்று) 12 பக்கங்களாக வெளிவருவதைக் குறித்து திராவிடன் ஆதரவாளர்கள் பொருத்தருள வேண்டுகிறோம். திராவிடன் 9-ம் ஆண்டு துவக்க இதழிலேயே இதுகுறித்து ஓரளவு விளக்கியிருந்தோம். தற்சமயம் காயிதவிலை முன்னைவிட இருபத்தைந்து சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. எனவே 14 பக்கங்களாக வெளியிடுவதென்றால் வீம்புக்காக வேண்டுமானால் சிலபல வாரங்கள் அவ்வாறு வெளியிட்டு பின்னர் மிகுந்த கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி தொல்லைகளைச் சுமப்பதைவிட திராவிடன் தொடர்ந்து பணியாற்றக் கூடிய—நமது நிலைக்கு தாங்கக் கூடியதான அளவில்—அதாவது 12 பக்கங்களாகவே இந்நிலையில் வெளியிட்டால்தான் 9-ம் ஆண்டினை குறைந்த அளவு கஷ்டங்களுடனாவது கடக்க முடியும் என்பதை வெளிப்படையாகவே தெரிவித்துக் கொள்கிறோம்.

பக்கங்களை கணக்குப்போட்டு அதற்காக மட்டுமே பத்திரிகைகளை வாங்கும் பழக்கம் கழகத் தோழர்களிடமும் பொதுவாக முற்போக்கு எண்ணங் கொண்டவர்களிடமும் இருக்க முடியாதென்பதை நாமறிவோம். அதிலும் கழக ஏடுகளை, பக்கங்களைக் கொண்டு தரம் பார்ப்பதைவிட அவைகள் தாங்கிவரும் சிறந்த கருத்துக்களையே மதிப்பிடுவதற்குத் தராசாகக் கொள்வர் என்ற நம்பிக்கையும் நமக்கு உண்டு.

எனவே 14 பக்கங்களுக்குப் பதிலாக 12 பக்கங்களாகத் (சற்று உயர்ந்த தாளில்) திராவிடன் வெளிவருவதைக் குறையாகக் கொள்ளாமல் வாசகர்கள் பேராதரவு தருமாறு வேண்டிக்கொள்கிறோம். காயித விலை எந்தநேரத்தில் பழைய விலைக்கு விற்கப்படுகிறதோ அந்த வாரத்திலிருந்து மீண்டும் 14 பக்கங்களாகவே வெளியிடப்படும். திராவிடன், பக்கங்களில் இரண்டு தற்காலிகமாக குறைக்கப் பட்டிருப்பினும் அதன் தரத்தில்—தரும் கருத்தில்—மேலும் பொலிவுடன் விளங்கிப் பணியாற்றுவான் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே திராவிடன் வாசகர்கள்—சந்தா நேயர்கள்—ஏஜெண்டு தோழர்கள் அனைவரும் எங்களின் இவ்வேண்டுகோளை ஏற்று தொடர்ந்து பேராதரவு தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நடக்க இருப்பவை

வளவனூர்

23—9—55 மாலை 6 மணிக்கு தி.மு. கழக சார்பில் பழைய சினிமா திடலில் திராவிட நாட்டுப் பிரிவினை நாள் கூட்டம் நடைபெறும். தோழர் க. பழனியப்பன் அவர்கள் தலைமையில் தோழர் என். வி. நடராசன், நாஞ்சில் மனோகரன் பேசுவர்.

பட்டுக்கோட்டை

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக சார்பாக 24—9—55 சனி மாலை 4-30 மணிக்கு காசாங்குளம் வடகரையில் தோழர் எம். கிருட்ணமூர்த்தி தலைமையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன் என். எஸ். இளங்கோ, கே. எஸ். எம். கலாநேசன், கே. அடைக்கலம் ஆகியோர் பேசுவர்.

திருவல்லிக்கேணி

கே. எஸ். பாண்டியன் படிப்பக சார்பில் திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டம் 25-9-55 மாலை 6-மணிக்கு 1/2 சிவராமன் தெரு, படிப்பகத்தில் நடைபெறும். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் செ. மா. தி. மு. க. செயலாளர் இளம்பரிதி, மா. பா. சாரதி, எம். கே. மணி, கபிலன், தாமோதரன், நெடுமாறன் பேசுவர்.

செங்கமேடு

25—9—55 ஞாயிறு மாலை 2 மணியளவில் பெண்ணாடம் மன்னார் செட்டியார் ரைஸ் மில்லில் நடக்கவிருக்கும் விருத்தாசலம் தி. மு. க. வட்டக் குழு கூட்டத்தில் விருத்தாசலம் வட்டக் கிளைக் கழக செயலாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன் என செயலாளர் தொ. பிச்சைமுத்து அறிவிக்கிறார்.

திருவில்லிப்புத்தூர்

திராவிட நாட்டுப் பிரிவினை நாள் பொதுக் கூட்டம் 25—9—55 அன்று மாலை 6-மணிக்கு தி. மு. கழக சார்பில் நடைபெறும், தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

பரமக்குடி

26—9—55 திங்கள் இரவு 8 மணிக்கு குமரன் படித்துறையில் தி. மு. சார்பில் பிரிவினை நாள் பொதுக்கூட்டம் நடைபெறும். எம். எ. வகாப் தலைமையில் தோழர்கள் இரா. சு தங்கப்பழம், ஆர். எஸ். பிரகாசம், எஸ். நித்தியானந்தம், பெரியனேந்தல் நாகலிங்கம் ஆகியோர் பேசுவர்.

குடியேற்றம்

27—9—55 செவ்வாய் மாலை 6—மணிக்கு குடியேற்றம் ஆற்றில் பொதுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

சங்கரநயினார்கோவில்

திராவிடநாடு பிரிவினைநாள் பொதுக் கூட்டம் 2—10—55 இரவு 7 மணிக்கு சுவாமி சன்னதி காந்தி திடலில் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், சு. பழனியப்பன் பேசுவர்.

மேலூர் (மீஞ்சூர் சமீபம்)

தி. மு. கழக சார்பில் 2-10-55 ஞாயிறு மாலை 5-மணிக்கு கடை வீதி அடுத்த திடலில் திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக் கூட்டம் நடைபெறும், தோழர் என். வி. நடராசன் கவிஞர் கண்ணதாசன் பேசுவர்.

நேரு பண்டிதரே கூறுங்கள் பதில்!

'தட்சிணப் பிரதேசம்'—என்பது வடநாட்டுப் பிடிப்பிலிருந்து அறவே விடுபட்ட (மொழிவழி அடிப்படையில்) தனி அரசாக இயங்குமா?

கேள்வி? பதில்.

—அஞ்சாநெஞ்சன்—

●

கே : திராவிட நாடு பிரிவினை வாரம் கொண்டாடி விட்டீர்களே—திராவிட நாடு கிடைத்து விட்ட மாதிரி அர்த்தமா?

—சடகோபன், மயிலை

ப : 1947-ம் ஆண்டுக்கு முன் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர வாரம் கொண்டாடப் பட்டதே அதன் அர்த்தமென்ன வென்பதை மயிலை அய்யர், அய்யங்கார்களிடம் கேட்டுப் பாருங்கள், அப்போது உமது கேள்விக்கும் விடை கிடைக்கும்.

*

கே : காமராச நாடார் ஈ. வே. ராமசாமிப் பெரியாருடைய வீட்டில் போய்ப்பார்த்தாரே இந்த என்ன அரசியல் ஸ்டண்ட்?

—எ. தாமோதரன், தஞ்சை

ப : ஆச்சாரியார் முதலமைச்சரா யிருந்தபோது பெரியார் அவர்களின் இல்லம் சென்று பேசினாரே அது எந்த ஸ்டண்ட் என்பதைத் தாங்கள் சிந்தித்துப் பார்த்தால் காமராசர் அவர்களின் சந்திப்பில் இருப்பதாகத் தாங்கள் கருதும் 'ஸ்டண்ட்' குறித்து புரிந்து கொள்வீர்.

*

கே : இந்தியாவிலே நேருஜிக்கு இணையான தலைவர் வேறு யாராகிலும் இருக்கிறார்களா?

—எஸ், பசுபதி, கோவை

ப : தோழரே, நேரு பண்டிதருக்கு இணையாக மட்டுமல்ல அவரை மிஞ்சு மளவுக்கு அறிவாற்றல் படைத்த தலைவர்கள் நம் தாயகத்தில் இருக்கிறார்கள். ஆனால் அனைத்திந்தியா என்ற பேரால் அத்தகைய அறிஞர்களின் புகழ் மறைக்கப்பட்டு வருகிறது. திராவிடம் தனிஉரிமை பெறட்டும். அப்போது இதன் விவரத்தை அறிவீர்.

*

கே : கோவாவில் சிந்தப்படும் இரத்தம் தென்னாட்டு ரத்தமல்ல வடநாட்டு இரத்தமுமல்ல இந்திய ரத்தம் ஓடுகிறது. என்று சென்னை சர்வகட்சிக் கூட்டத்தில் தோழர். ஜீவா கூறினாரே, அப்படியானால் அவா உடலில் ஓடும் ரத்தம் எந்த ரத்தம்?

—இரா. அ. பழனிச்சாமி ராசிபாளையம்

ப : தோழரே, நான் ரத்தப் பரீட்சையில் தேறியவனல்ல. ஆனால் தற்சமயம் தமிழக கம்யூனிஸ்டுகளின் உடலில் ஓடுவது கம்ப ராமாயண ரத்தம் என்று ராஜாஜியின் சிஷ்யர் ஒருவர் சொன்னதாக என் நண்பர் ஒருவர் கூறினார்.

*

கே : சர்தார் பட்டேல் உயிரோடிருந்தால் நேருஜியின் நிலைமை எவ்வாறிருக்கும்?

—எம். சி. கணபதி, குளத்தூர்

ப : நம் மாநிலத்தில் ஆச்சாரியார் கோஷ்டிக்கும், காமராசர் கட்சியினருக்கும் இருந்துவரும் "ஒற்றுமை"யும் அதை யொட்டிய நடவடிக்கைகளும் டெல்லி தர்பாரில் அடிக்கடி நடைபெற்றிருக்கும்.

*

கே: இந்த வருஷம் பெரியார் கட்சி பிள்ளையாரை ஏன் உடைக்க வில்லை?

—சிதம்பர நாதன். பிரம்பை

ப : அந்த வேலையைப் பிள்ளையார் பக்தர்களே மேற்கொண்டு விட்டதால்.

*

கே : மாநில மாநாடு டிசம்பர். மாதத்திலாவது நடக்குமா?

—எஸ் கிருஷ்ணன், தஞ்சை

ப : தோழரே சலிப்படைய வேண்டாம். டிசம்பர் இறுதியில் நடைபெறும்.

அடுத்த வாரம்

பஞ்சாபில் மூன்று நாட்கள்—(முக்கிய நிகழ்ச்சிகள்) கூத்தரசன் மடல், சென்னை நகரசபை தேர்தல் முடிவுகள், கோமதியின் காதலன் திரைப்பட விமர்சனம் முதலியவைகள் வெளிவரும். —(ஆ—ர்)

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்

விவசாயிகளின் அறப்போர்

தோழர் ஆதித்தன் கைது செய்யப்பட்டார்.

ஸ்ரீபெரும்மந்தூர்வட்டம் மாத்தூர் கிராமத்தில் விவசாயி—மிராசுதார் இடையே ஏற்பட்ட தகராறை யொட்டி நடைபெற்று வரும் விவசாயிகள் அறப்போராட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள 144 தடை யுத்தரவை எதிர்த்து சில விவசாயிகளுடன் 'தினத்தந்தி' ஆசிரியர் தோழர் எஸ். பி. ஆதித்தன் அவர்கள் 19—9—55 அன்று அறப்போராட்டத்தில் ஈடுபட்டதின் காரணமாக கைது செய்யப்பட்டு சென்னை சென்ட்ரல் ஜெயிலில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த ஒரு திங்களாக நடைபெற்றுவரும் இந்தத் தகராறை யொட்டி விவசாயிகள் நடத்தி வரும் அறப் போராட்டத்தில் இதுவரை 130 பேர் கைது செய்யப் பட்டிருப்பதாகவும் அவர்களில் 50 பேர் ஜாமீனில் விடுதலையாயினர் என்றும் தெரிய வருகிறது.

சென்னையில் திராவிட நாடு பிரிவினை வாரச் சிறப்பு

மாநில மாநாட்டுக்கு ரயில்வே தொழிலாளர்கள் அளித்த பெரும் நிதி

18—9—55 ஞாயிறு பிற்பகல் 4-மணிக்கு நேப்பியர் பார்க்கிலிருந்து சென்னை மாவட்ட செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு பெரமபூர் ஏரித்திடலில் முடிவுற்றது. மாலை 6-30 மணிக்கு 6-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் மகத்தான பொதுக்கூட்டம் ஒன்று தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசினார்,

அடுத்து ரயில்வே தொழிலாளர் சார்பில் தோழர் முகில்வண்ணன், அண்ணா அவர்களை வரவேற்றும், தி. மு. கழகம் பொதுவாக தொழிலாளர் நலனில் கொண்டுள்ள எண்ணத்தையும் விவரித்துப்பேசி ரூ. 524—9—2 கொண்ட பணமுடிப்பை மாநில மாநாட்டு நிதியாக அண்ணா அவர்களிடம் அளித்தார்.

மற்றும் அம்பத்தூர் டி. ஐ. சைகிள் பாக்டரி தொழிலாளர் 27—4—0, செம்பியம் இந்தியா வின்ஸ்டன் தொழிலாளர் 22-4-0 புளியந்தோப்பு ஜோசப் நினைவு நூல் நிலையம் 25-0-0 கொண்ட பணமுடிப்புகளை மாநிலமாநாட்டுக்கு அளித்தனர்.

இறுதியாக அண்ணா அவர்கள் நீண்டதோர் விரிவுரையாற்றி தொழிலாளாதோழர்களின்முயற்சிக்கு நன்றி தெரிவித்தார்கள்.

இரண்டாம் திட்டம்

ரூ 600 கோடி வெளிநாட்டு உதவி தேவையாம் !

கிடைத்துள்ள வெளிநாட்டு உதவித் தொகையான ரூ, 260 கோடியில், சுமார் ரூ. 50 கோடி வரையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதியில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது. 'இரண்டாம் திட்டம் முழுவதற்குமாக சுமார் ரூ.600 கோடி வெளிநாட்டு உதவி தேவைப்படலாம்," என்று திட்டக்குழு நியமித்த பொருளாதார நிபுணர் குழு தெரிவித் திருக்கின்றதாம் !

அறிக்கை

சென்னையில் உலக நிறுவனமாகிய ஒய். எம். சி ஏ. யின் கிளைக் கழகமாக தமிழ்த் தொண்டாற்றி வருவது பட்டி மன்றம்,

பட்டி மன்றத்தில் வாரந்தோறும் (வெள்ளிக் கிழமை) சிறந்த தமிழ் அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவு நிகழும்.

தமிழில் பேச ஆசையுடையவர்கள் ஆண்டுக்கு ரூபாய் ஒன்று நன்கொடை தந்து பட்டி மன்றத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ளலாம் என செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை கொத்தவால் சாவடி வட்டத்தில்
திராவிட நாடு பிரிவினை வாரக் கூட்டம்

25—9—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு

அண்ணா பிள்ளைத் தெரு அருகில்

14-வது வட்டத் தி. மு. கழக சார்பில் நடைபெறும்.

சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர்

தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில்

அறிஞர் அண்ணா

தோழர்கள். டி. சண்முகம், இளம்பரிதி பேசுவர்.

அதுசமயம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

குருபீடம் காட்டும் பாதை! -- கம்யூனிஸ்ட் 'காம்ரேடு'களுக்கு!

“நல்லது கெட்டது ஆகியவற்றை நன்குணர்ந்து கொள்ள கருத்திலும் காரியத்திலும் நாஸ்தீக லோகாயதக் கொள்கைகளையே மக்கள் பயன்படுத்த வேண்டுமென சீனாவின் கம்யூனிஸ்ட் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு லோகாயதத்தைப் பரப்பும் நோக்கோடு நடத்தும் பிரச்சாரச் சொற்பொழிவுகளில் தெரிவிக்கின்றனர்.”

“வாழ்க்கை என்பது யாது? அதன் நோக்கங்கள் என்ன? என்பதை லோகாயதக் கொள்கை நன்கு விளக்குகின்றது. எது சரி, எது தவறானது என்பதைக் கடந்த காலத்தில் சீன மாணவர்கள் உணர முடியவில்லை. நாஸ்தீக லோகாயதக் கொள்கையைத் தெரிந்து கொண்ட பிறகு அவர்கள் இவ்வறிவைப் பெருகின்றனர்”

“மார்க்ஸும் லெனினும் கூறியுள்ள லோகாயத முறை உலக உண்மையாகும். நாஸ்திகம் என்பதுதான் லோகாயதம். லோகாயத முறைகளைப் பின்பற்றினால்தான் கருத்தும் செய்கையும் சரியாக இருக்கும்”

—பீகிங் ரேடியோ செய்தி (சு.மி. 31-8-55)

*

சமயப் பற்றை எதிர்த்து மக்கள் மனதில் பதியும்படியாக 30 பக்கப் புத்தகம் எழுதுபவருக்கு 15000 ரூபிள்கள் (ரூபிள்—ரஷ்ய நாணயம்) பரிசளிக்க ரஷிய கல்வி இலாகாவினர் முன்வந்துள்ளனர்.

“ஜனரஞ்சகமான, விஞ்ஞான, நாஸ்தீகப் பிரசுரங்கள் மூன்றிற்கு இத்தகைய பரிசுகள் அளிக்கப்படும். தலா 7000 ரூபிள்களாக 6 பரிசுகளும், 5000 ரூபிள்களாக 10 பரிசுகளும் வேறு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. —மாஸ்கோ வெளியிட்ட செய்தி

—(தினமணி 8—9—55)

*

மேற்கண்ட செய்திகளைப் பத்திரிகை வாயிலாக எல்லோரும் படித்திருப்பார்கள்: கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் பார்த்துக் கவனஞ் செலுத்தி யிருப்பர் என்றே எண்ணுகிறேன்.

நமது அண்ணா அவர்கள் ஒருமுறை (சென்ற மாநிலமாநாட்டில் என்று எண்ணுகின்றேன்) “தென் நாட்டில்—ஏன் இந்திய துணைக் கண்டத்திலேயே — உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று இருக்கிறது என்றால் அது திராவிட இயக்கமே—திராவிட முன்னேற்றக் கழகமே அன்றி வேறில்லை” என்று கூறினார். நெஞ்சிலே வஞ்சகமின்றி நேர்மையுடன் ஆராய்ந்தால் அண்ணாவின் இந்த எடுத்துக்காட்டு முழுக்க முழுக்க உண்மையானது என்றே எவரும் கூறுவர். இந்த நாட்டில் கம்யூனிஸ்டுகள் என்று கூறிக் கொள்கின்றவர்களை (So-Called Communists) தவிர!

நம்மைப்பற்றி — திராவிட இயக்கத்தைப்பற்றி—விமர்சித்த வெளிநாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் நம்மைக் கம்யூனிஸ்ட் கட்சியினர் என்றே கூறி யிருக்கின்றன. உண்மையிலேயே இந்த நாட்டில் பட்டி தொட்டிகளி லெல்லாம் ‘கம்யூனிஸ்டுகள் என்றால் பேயோ, பூதமோ என்று கொண்டிருந்த பீதியையும் வெறுப்பையும் போக்கி கம்யூனிஸம்-பொதுவுடமை என்றால் என்ன என்று புரியும்படி விளக்கியவர்கள் நாம் தான் எனப் பெருமையுடன் கூறிக்கொள்ள உரிமையுண்டு.

மார்க்ஸையும் லெனினையும் மக்கள் மன்றத்திலே படம் பிடித்துக் காட்டியவர்கள் திராவிட இயக்கத்தினர்தான் என்பதை நாடு சொல்லும். ஆனால் இந்த நாட்டுக் கம்யூனிஸ்ட் ‘காம்ரேடு’கள் ஏதற்கெடுத்தாலும் எந்தப் பிரச்னையானாலும்—‘ரஷ்யாவைப் பார்! மாஸ்கோ மார்க்கம் காணீர்!’ என்று நடித்தனரே தவிர, நாட்டு நடப்புக் கேற்ற நல்ல திட்டம் காட்டும் சுயசிந்தனை மறந்து அலைந்தனர்—அலைகின்றனர்.

“ஆகா! எவ்வளவு அழகான நாய் இது! எவ்வளவு அன்பாகவும் நன்றியுடையதாகவுமிருக்கிறது” என்று யாராவது தான்கண்ட நாயைப்பற்றிப் பேசினால் இதுவும் ஒரு நாயா? சீ! ரஷ்ய நாட்டிலே ஒரு நாய் இருக்கிறதாம்: அடா! அடா! என்ன அழகு! எவ்வளவு உயரம்! அதன் கால் தூசுக்குக் கூட இந்த நாய் அருகதையாகுமா?” என்று ‘சோவியத் நாடு’ இதழில் கண்ட நாய்ப் படத்தைப் புகழ ஆரம்பித்து விடுவார் தோழர்.

குழாயடியிலே நடக்கும் பெண்கள் சண்டையைப் பார்த்த யாரும் இது என்ன பெண்கள் இப்படிப் ‘பளார் பளாரென்று ஒருவரை யொருவர் அடிக்கின்றார்களே!’ என்று கூறிவிட்டால் போதும்; உடனே ஆரம்பித்து விடுவார் நம் ‘கம்யூனிஸ்ட்’ தோழர். இதெல்லாம் ஒரு அடிதடியா?

சண்முகம் குலசேகரன்

ரஷ்ய நாட்டிலே பார்க்கணுமே! பெண் தனது முஷ்டியை முறுக்கிச் சுழட்டி ஆண்களையே குத்துகிற குத்துகள்! அப்பப்பா! அதல்லவா சண்டை என்று அந்தப் பெண்களின் ‘வீரப் பெருமையை’ விளக்க ஆரம்பித்து விடுவார்’

தெரிந்தோ தெரியாமலோ இங்குள்ள கம்யூனிஸ்டுகள் முற்போக்கு என்றபேரால் விவரிக்க முடியாத மூடப் பித்தில் மூழ்கியிருக்கின்றனர்! சீனா சிகப்பான பின்— மா-சே-துங் மகுடந்தரித்த பிறகு—‘செஞ்சீனா பார்! என்ற அடியையும் சேர்த்துக் கொண்டனர் தங்கள் பாட்டோடு. ரஷ்யாவையும், சீனாவையும் பாரீர் என்று கூறுகின்ற இந்தக் கம்யூனிஸ்ட்கள், உண்மையிலேயே ரஷ்ய, சீனத் தலைவர்களைப் பின்பற்றுகின்றனரா? அவர்களது கொள்கைகளைப் பேசுகின்றனரா? என்றால் இல்லை என்றுதான் கூறமுடியும், உறுதியுடன்.

மதம் மக்களுக்கு அபின் (Opium) என்று மதபோதையில் மக்கள் அறிவிழந்து அல்லற்படுவதை உணர்ந்து கூறினார் மார்க்ஸ்—பொதுவுடமைக் குரு.

மதம் மனிதனது முயற்சியில் நம்பிக்கையின்மையை உண்டாக்கி விதி, பாவம், நரகம் போன்ற மூட எண்ணத்தைப் புகுத்தி அவனது வாழ்க்கையில் முன்னேற விடாமல் தடுக்கிறது என்பதை அறிந்து மதம் மக்களது முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை என்று கூறிச் சாடியிருக்கின்றனர், மதக் கொள்கைகளை மார்க்ஸிம் லெனினும் காட்டிய லோகாயத்தைக் கொள்கைகளின் உண்மையை உணர்ந்த ருஷ்ய, சீன நாட்டுத்தலைவர்கள், அந்த அந்த நாட்டு மக்களின் மனதிலே வேரூன்றியுள்ள மத மடமையைப் போக்கும் வழிகளைக் கடைப்பிடிக்கின்றனர் என்பதை முகப்பில் காட்டியுள்ள செய்திகள் நிரூபிக்கின்றன.

இந்த நாட்டிலே குறிப்பாகத் தமிழ் நாட்டிலே—மதம் போதிக்கும் மடமையை, அது வகுத்துள்ள சாதிப் பாகுபாட்டினை— உயர்வு தாழ்வு மனப்பான்மையை, அதனால் நாடு அடைந்த இழிவை தாழ்மையை ஆதாரங்கள் காட்டி விளக்கி, கண்டித்துப் பகுத்தறிவுச் சுடர் பரப்பி வருவது திராவிட இயக்கம்தான்.

இங்குள்ள கம்யூனிஸ்டுத்தோழர்களோ மதக் காவலர்களையும் புரோகிதர்களையும் பூசாரிகளையும் பகைத்துக் கொண்டால் தாங்கள் ஓட்டுகள் பெற முடியாதே என்று அஞ்சுகின்றனர். மார்க்ஸையும் லெனினையும் பின் பற்றி, ருஷ்ய சீன அரசினரது கோட்பாட்டைக் கருத்திற்கொண்டு மதத்தைக் கண்டிக்க மறுக்கின்றனர். இன்னும் ஆச்சரியப் படத்தக்கது என்னவென்றால் அந்த நற் பணியாற்றும் தி. மு. கழகத்தினர் மீது வசை பாடுகின்றனர்-இங்குள்ள மாதிரி கம்யூனிஸ்டுகள்!

இலங்கையிலே ஒருபிரபல கம்யூனிஸ்ட் பிரமுகரான பீட்டர் கெனமன் என்பார் (பார்லிமெண்ட் மெம்பருங்கூட) அங்குள்ள ஜிந்தும்பட்டி சுப்பிரமணியா கோயிலுக்குச் சென்று (ஊர்வலமாக) ஐந்து ரூபாய் தட்சணை ஐயருக்குக் கொடுத்து (வழக்கமாக ஐயருக்குக் கொடுக்கும் காணிக்கை பத்து சதம்தானும்) அர்ச்சனை செய்தாராம்! அக்காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகின்றனராம். அங்குள்ள காம்ரேடுகள்.

பாரீர் எம் தலைவரை நாங்கள் மதத்தை வெறுப்பவர்கள் என்றால் எங்கள் கெனமன் கோயிலுக்குப் போவாரா? காணிக்கை கொடுப்பாரா? அர்ச்சனை செய்வாரா? நெற்றியிலே விபூதியும் திலகமும் இடுவாரா? என்றெல்லாம் பிரச்சாரம் செய்து ‘ஜன சக்தியை’த் திரட்டுகின்றனர். இன்னும் ருஷ்ய நாட்டுத் துண்டுச் செய்திப் படங்களைத் திரையிட்டுக் காட்டி இதோ பாரீர்! கம்யூனிஸ்ட் நாட்டில் மசூதிகளுக்கும் மாதா கோயிலுக்கும் மக்கள் சாரை சாரையாக ‘க்யூ’ வரிசையில் செல்கின்ற காட்சியை! நாங்கள் மசூதியை, மாதா கோயிலை இடிப்பவர்கள்-வெறுப்பவர்கள் அல்ல. மதக்காவலர்கள் யாம்! என்று பிரசங்கம் புரிகின்றனர்! ஆகவே இங்கும் இலங்கையிலும் உள்ள கம்யூனிஸ்டுகள் உண்மையான கம்யூனிஸத்தை உணராத போலிகள் அல்லவா?

ரஷ்ய நாட்டிலும், சீன நாட்டிலும் உள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் முகப்பில் எடுத்துக் காட்டிய வண்ணம் மக்கள் மனதில் நிலைத்துள்ள மதவெறி—மூடப்பழக்க வழக்கங்களை — மடமை எண்ணத்தை ஒழித்து நல்வாழ்வு நல்கும் வகையில் நற்பணியாற்றுகின்றனர். ஆனால் இங்குள்ளவர்கள் பழமைக்குப் பல்லக்கு சுமக்க ஓடுகின்றனர்! வேதாந்திகளாக மாறுகின்றனர், எனவே இனியாகிலும் குருபீடம் காட்டும் பாதையில் ஜீவாக்களும் கெனமன்களும் நடப்பார்களா யென்று கேட்கிறோம்.

கள்ளிக்கோட்டையிலே கூடப்போகிறதாமே கம்யூனிஸ்ட் மாநாடு! அந்த மாநாட்டிலாவது அண்ணா கூறியபடி உண்மையான பொதுவுடமைப் பூங்காவாம்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை ஏற்று ஆவன செய்ய தென்னாட்டுக் கம்யூனிஸ்ட்டுகள் ஈடுபடுவார்களா?

அறிவொளி பரப்ப அக்டோபர் முதல் நாள் வெளிவருகிறது.

அறிவொளி

திராவிடர் முற்போக்கு வார இதழ்

ஆசிரியர் : பால்வண்ணன்

விலை அணா 2.

ஏஜெண்ட் இல்லாத ஊர்களில் முன் பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

அறிவொளி

38, சாமி பண்டாரம் தெரு, சென்னை-2



செய்திகள்

பம்பாய்

7—9—55 இரவு 7 மணியளவில், கழகப் பணிமனை திராவிடரகத்தில் தோழர் மா. அண்ணாமலை அவர்கள் தலைமையில், செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த கூட்ட நிகழ்ச்சிகள், கடிதப் போக்குவரத்துக்கள் படித்துக் காண்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பம்பாய் தி. மு. க. பொதுக்குழு பிரதிநிதிகளில் ஒருவராக தோழர் மா. இரா. குறள்தாசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

படிப்பகப் பொறுப்பாளராக செயலாளரால்தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் எஸ். தங்கையா அவர்களை குழு அங்கீகரித்தது.

'முயற்சி'யில்வெளிவந்திருக்கும்அறிவு கட்டுரைப் போட்டி ஆகியவைகள் குழு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டு போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு இரண்டு பரிசுகள் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

மற்றும் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவா விடுதலைக்காகச் சென்ற அறப்போர் வீரர்களை கோவா அதிகாரிகள் படுகொலை செய்ததை வன்மையாகக் கண்டிப்பதுடன், கோவாவைவிட்டு உடனடியாக போர்த்துகீசிய அரசாங்கம் வெளியேற வேண்டும் என இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

நாட்டின் விடுதலைக்காக, கோவா போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களுக்கு இக்கூட்டம் வீரவணக்கத்தைத் தெரிவிதுக் கொள்வதோடு அன்னாரின் உறவினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்கிறது.

21—8—55-ல் ஞாயிற்றுக்கிழமை கழக உறுப்பினர் தோழர் கோதைராசன் அவர்கள் திடீர் மரணம் எய்தியதை குறித்து இக்கூட்டம் பெரிதும் வருந்துவதுடன் துயரால் வாடும் அன்னாரின் உறவினர்களுக்கு தனதுஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தோழர் எஸ். தியாகராசன் அவர்களின் தமையனார் தோழர் எஸ் சுப்பையா அவர்களின் ஆண் குழந்தை 7—9—55-ல் மரணம் அடைந்ததைக் குறித்து இக்கூட்டம் பெரிதும் வருந்துவதுடன் துயரால் வாடும் அன்னாருக்கும், அன்னாரின் உறவினர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

திருவள்ளுவர் கலா மன்றம்

திருவள்ளுவர் கலா மன்றக் கூட்டம் 11—9—55 ஞாயிறுகாலை 10 மணிக்கு தாராவி ரசீம்சேட்சால் பின்புறமுள்ள பந்தலில் தோழர் எ. சாம்ராஜ இன்னிசையுடன் மன்றத் தலைவர் ஏ. பி. ஏசுநாதன் தலைமையின் கீழ் கூடியது. கடந்த கூட்ட நிகழ்ச்சிகளும் கடிதப் போக்குவரத்துகளும் செயலாளர் உ. அ. செல்லையாவால் வாசித்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

தோழர் செல்லை இரா. இளம்வழுதியின் இரண்டாவது நாடகமான 'காதல் பலியை' வெகுவிரைவில் நடத்துவதெனவும் பல முக்கிய பிரச்னைகள் குறித்தும் முடிவெடுக்கப்பட்டது.

மன்ற நடிகர் எ சாம்ராஜ அவர்களின் இளவல் தாயகத்தில் இயற்கை எய்தியமை குறித்தும் முன்னாள் மன்ற உறுப்பினர் தோழர் கோவிந்தராசனின் திடீர் மறைவுக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தோழர்களான எஸ். எஸ். சண்முகநாதன், கே. எஸ். நடராசன் இன்னிசைக்குப் பின் துணைச்செயலாளர் கே. கே. சீனிவாசன் நன்றி நவில கூட்டம் 1–30 மணியளவில் இனிது கலைவுற்றது.

*

கோபிசெட்டி பாளையம்

தி. மு. கழகப் பொதுக் கூட்டம் 2–9–55 அன்று மாலை 7-மணியளவில் பெரியார் திடலில் நடைபெற்றது. தோழர், பி. எ. சாமிநாதன் தலைமை வகித்தார் ஊழியன் ஆசிரியர் ஜி. எ. வெங்கிடாஜலம், கோவை மாவட்ட துணைச்செயலாளர் வி. சண்முகநாதன் தென்றல் துணை ஆசிரியர் எஸ். எஸ். தென்னரசு, ஆகியோர் திராவிட நாடு பிரிவினையின் அவசியம் குறித்து நீண்டதோர் விரிவுரையாற்றினர்.

கொமாரசாமிபட்டி

18–9–55 இரவு 7-மணிக்கு தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் முன்னாள் செயலாளர் வெ. பெரியசாமி அவர்கள் தலைமையில் கூடியது. அது போது திராவிட நாட்டுப் பிரிவினை நாள் கொண்டாடிய வரவு, செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டது.

அன்று காலை 8-மணி முதல் மாலை 6-மணி வரை செயலாளர் இரத்தனசாமி தலைமையில் ஒலி பெருக்கியுடனும், சைக்கிள் ஊர்வலத்துடனும் முக்கிய தெருக்களில் கொடி ஏற்று விழாவுடனும் திராவிட நாடு பிரிவினை நாள் அதிக விமரிசையாக கொண்டாடப் பட்டது.

சென்னை 43-வது வட்டத் தி.மு.க.

14-9–55-ல் கூடிய கிளைக்கழக அவசரச் செயற்குழுக்கூட்டத்தில்கழக உறுப்பினர் தோழர் ஆர். சந்தானம் அவர்களின் திடீர் மரணத்திற்கு வருத்தம் தெரிவித்து ஓர் அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது கிளைக் கழகத் துணைச்செயலாளர் து. வேணுகோபால் அவர்களின் விலகல் கடிதமும், பொது உறுப்பினர் ஒருவரின் விலகல் கடிதமும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது அடுத்து நடைபெறும் பொது உறுப்பினர் கூட்டத்தில் புதிய துணைச் செயலாளர் தேர்தல் நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது. அக்டோபர் திங்களில் தோழர் இ. வி. கே. சம்பத் அவர்களைக் கொண்டு ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதென்று முடிவு செய்யப் பட்டது.

*

திராவிட நாடு பிரிவினை வார விழா 17–9–55 கொண்டாடப் பெற்றது: கழகப் பணிமனையும், சுற்றுப் புறமும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு கழகக்கொடி காலையில் செயலாளர் மு. புரட்சி மணியால் ஏற்றி வைக்கப்பட்டது. அன்றியும் பிரிவினை வார விளக்கச் சுவரொட்டிகள் வட்டத்தின் முக்கிய இடங்களில் எல்லாம் ஒட்டப்பட்டன.

கழகத் தோழர்கள் கைது

43-வது வட்ட தி. மு கழக தோழர்கள் வி. கன்னியப்பன், பி. கே. சிவக்குமார், ஆகிய இருவரும் திராவிடப் பிரிவினை வார விளக்கச் சுவரொட்டிகளை வட்டத்தின் முக்கிய இடங்களில் 13–9–55 இரவு ஒட்டிக் கொண்டு வருகையில் D. 3 போலீஸ் சப் இன்ஸ்பெக்டரால் பி. பி. ரோடில் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மீண்டும் ஒட்டினால் கைது செய்வோம் என்று சப் இன்ஸ் பெக்டர் தோழர்களிடம் கூறி சுமார் இரண்டு மணி நேரத்திற்குப்பின் போலீஸ் அதிகாரிகளே விடுதலை செய்தனர்.

18-வது வட்டத் தி. மு. க.

18—9—55 காலை 9 மணிக்கு திராவிடநாடு பிரிவினை வார விழாவும் 7-ம் ஆண்டு துவக்க விழாவும் கழகப் பணிமனையில் தோழர் நித்தியானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது, தோழர் சிவானந்தம் கழகக் கொடியை ஏற்றுவித்தார். அடுத்து தோழர் இ. வி. கே. சம்பத் அவர்கள் கோமளீஸ்வரன்பேட்டையில் நிகழ்த்திய சொற்பொழிவை ஒலிபரப்பப்பட்டது பின்னர் கழக துணைச்செயலாளர் கே. சுப்பிரமணி நன்றி நவில தேநீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கவசம்பட்டு

18—9—55 மாலை 5 மணிக்கு ஏழாம் ஆண்டுவிழா பேண்டுவாத்தியம் முழங்க கே. மாணிக்கம் அவர்கள் தலைமையில் கருத்தோவியன் கொடி ஏற்றி வைத்தார். பிறகு கொடி ஊர்வலம் புறப்பட வில்வநாதன் மகன் திராவிடமணி மூன்று வயது சிறுவன் கையில் கழகக் கொடி எந்தியார்கேட்டாலும் கொடுக்காமல் ஊர்வலம் மேடை அடையும் வரையில் அவனே கொண்டு வந்தான். பிறகு திராவிடப்பண் பாடப்பட்டது. அன்பரசன், வில்வநாதன் கருத்தோவியன், போளூர் சுப்பிரமணியன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆறு ஆண்டு பட்ட கஷ்ட நஷ்டங்களையும் இதற்கிடையிலே வளர்ச்சியுறும் தன்மையும், திராவிடம் பிரியவேண்டிய அவசியத்தையும் பற்றி விளக்கமாகப் பேசினர்.

கம்பம்

9-9-55 வெள்ளி இரவு 10 மணிக்கு கம்பம் காந்திமதி நிலையத்தில் கம்பம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் செயலாளர் திரு பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றதுடன் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவாவில் போர்ச்சுகீசிய சர்க்கார் நடத்திய அடக்குமுறையைக் கண்டிப்பதுடன் அப்போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.

கம்பத்தில் ஏற்கனவே இருந்த பஸ் நிலையம் காலி செய்யப்பட்டுவிட்டதால் தற்சமயம் பஸ்கள் நிற்பதற்கு இடமில்லாமல் ரோடுகளில் நிற்கின்றன! பிரயாணிகளும் டிக்கட் எடுத்து பஸ்களில் அமர்வதற்கு மிகவும் துன்பப்படுகின்றனர். மழைகாலங்களில் பிரயாணிகள் ஒதுங்கி நிற்பதற்குக்கூட இடமில்லை. ஆகவே கம்பம் பஞ்சாயத்துபோர்டு உடனே தக்க நடவடிக்கை எடுத்து பஸ் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

நாளது தேதி வரை உள்ள கம்பம் தி. மு. க. வரவு செலவு கணக்குகளை சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆம்பூர் திருவள்ளுவர் கழகம்

18-9-55 ஞாயிறு காலை 11-மணிக்கு மேற்படி கழக நிலயத்தில் மேற்படி கழகத்தின் செயற் குழுக் கூட்டம் கூடியது கூட்டத்திற்கு திரு எ. ஜி. சாமி தலைமை வகித்தார், செயலாளராக திரு ந. க. கணேசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் செயலாளர் நன்றியுரை தெரிவித்து, திரு, வி. க. நினைவு நாளைக் குறித்து (17–9–55) சிறிது நேரம் பேசினார். தேனீர் விருந்திற்குப் பின் கூட்டம் முடிந்தது.

மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர் கழக 'பிரிவினை நாள் விழா'

மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர்

'நம் நாடு'

(தின இதழ்)

●

ஒவ்வொரு தி மு. கழகக் கிளையிலும் தவறாது இருக்க வேண்டிய அதிகார பூர்வமான ஏடு.

எனவே, கிளைக் கழக நிர்வாகிகளே, அன்பு கூர்ந்து ஆவன செய்வீராக.

ஐ. நா.-வில் செஞ்சீனா?

ஐ. நா. பொதுச் சபையின் பத்தாவது 20-9-55 கூட்டம் துவங்கியதும், ஐ. நா. வில் தேசிய சீனாவிற்குப் பதிலாக செஞ்சீனாவிற்கு இடமளிப்பது குறித்து தீர்மானம் ஒன்றை சோவியத் வெளிநாட்டு மந்திரி மாலடோவ் கொண்டுவந்தார். உடனே அமெரிக்கப் பிரதிநிதியான ஹென்றி ராபர்ட்லாட்ஜ் இதனை ஆட்சேபிக்க இப்பிரச்னை அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மாணிக்கவாசகி—வரதராசு

19–9–55 காலை 9-மணிக்கு சென்னை சூளைபட்டாம் பிரகாசா நகர் பழைய பென்ஷன் லேன் எம். பிளாக் 8-ம் எண்ணுள்ள இல்லத்தில் தோழர் எம். வரதராசன்—டி. மாணிக்கவாசகி ஆகியோரின் திருமணம் தோழர், என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. அதுபோது மணமக்களைப் பாராட்டி தோழர்கள் கதிர் டி. சுப்ரணியம், டி. சண்முகம் கோ. இளவரசு, மாணிக்கம் ஆகியோர் பேசினர். மணமக்களுக்கு வாழ்த்திதழும் அன்பளிப்பும் வழங்கப்பட்டன. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம். நன்றி நிர்வாகி.

தோற்றம்

அறந்தாங்கி தி. மு. கழக முன்னணி வீரரும் மும்முனைப் போராட்டத்தில் இரண்டு திங்கள் சிறை சென்றவருமான தோழர் மு. சீனிவாசன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் கோவிந்தம்மாள் அவர்கள் 16—9—55 அன்று இரவு 10-30மணிக்கு ஒரு ஆண் மகவை பெற்றெடுத்தார்கள். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப் பெற்றோம். நன்றி—நிர்வாகி.

திராவிடன்
சந்தா விவரம்

ஆண்டு சந்தா	... ரூ.	8	0	0
ஆறுமாதம்	... ரூ.	4	0	0
தனிப்பிரதி	... ரூ.	0	3	0

கழக சார்பில் பிரிவினை நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 18—9—55 இரவு 11 மணிக்கு திராவிட இசைக் குயில் பி. எஸ். செல்வா சௌந்தரராசன் குழுவினரால் ஓர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது பின் மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து திராவிடநாடு பிரிய வேண்டிய அவசியத்தை விளக்கிப் பேசினார். ஓட்டல் தொழிலாளர் கழக பொறுப்பாளன் ஞா. தியாகஅரசு நன்றி கூறலுடன் இரவு 2 மணிக்கு விழா சிறப்பாக முடிந்தது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடி விழாவினை சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

*

தோழமைக் கழகம்

18—9—55-ந்தேதி மதுரை வடக்கு மாசி வீதி இராமாயணச்சாவடி முன்பாக தோழர் அ. பிச்சை அவர்கள் தலைமையில் திராவிடநாடு பிரிவினை விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர் கலைமாறன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

இலங்கையில் திருவள்ளுவர் திருநாள்

ஆனந்தீஸ்வரி சுப்ரமண்யம், பழனிநாதன் சொற்பொழிவுகள்

கடந்த 21—8—55-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு வேயாட்ஸ் பிராட்வே, நாராயண குரு மண்டபத்தில் தோழர் எம். ஐ. இராசமணி அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் நினைவு நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் தோழர்கள் உரிமைக் குரல் ஆசிரியர் நா. பழனிநாதன் பா. ச. தேம், தலுவத்த, ஆகியோர் சொற்பொழிவாற்றினர் பின் இ தி.மு. பொதுச் செயலாளர் இரா. அதி. மணி அவர்களும் சொற்பெருக்காற்றினர்

*

உலகத்திற்கு உள்ளொளி காட்ட வல்ல ஒரே ஞாயிறு திருக்குறள்

"உரிமைக்குரல்" ஆசிரியர் ந. பழனிநாதன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

திருக்குறள் ஓர் உலக நூல்! அதில் எந்த மதச்சார்பும் இல்லை! எந்த இனச் சார்பும் இல்லை! தனிப்பட்ட மன்னர்களைப் போற்றிப் பாடப்பட்ட பாடல்களும் அல்ல குறள்; அது உலக கண்ணோட்டத்தில் எழுந்த ஒப்புயர்வற்ற நூல்.

திருக்குறளின் பெருமை இன்று எங்கணும் பேசப்படுகிறது. திருக்குறளைத் தாங்கி வராத ஏடுகள் இன்று ஏதுமில்லை. திருக்குறள் பற்றிப் பேசாத மேடைகளுமில்லை.

திருக்குறள் தமிழகத்திற்கு மட்டுமல்ல—இங்கிலாந்துக்கு மட்டுமல்ல—ரஷ்யாவுக்கு மட்டுமல்ல—அமெரிக்காவுக்கு மட்டுமல்ல—அகில உலகத்துக்குமே வழிகாட்டவல்ல சிறந்த நூல்!

கதிரவன் உலகத்தின் புற இருளை நீக்குகின்றான். இந்த வள்ளுவனோ உலகத்தின் அக இருளை அகற்றுகின்றான். திருக்குறளைக் கதிரவனுக்கு ஒப்பிடலாம். கதிரவனின் ஒளிக்கதிர்கள் நம் உடல் மேல் வீசுகின்றன. வள்ளுவனின் சொல்லொலிகளோ நம்முள்ளத்தில் வீசுகின்றன.

திருக்குறளைக் கதிரவனுக்கு ஒப்பிடும் போது சிலம்பை திங்களுக்கு ஒப்பிடலாம். நீதியையும் கற்பையும் வற்புறுத்திச் சொல்லும் சிலம்பை திங்களுக்கு ஒப்பிடுவதில் தவறில்லை, திங்கள் உலகத்திற்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறதோ, அந்த அளவிற்கு சிலம்பு உலகத்திற்கு பயன்படக் கூடியதே. ஏனைய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்க்கணக்கு, தொல்காப்பியம், மற்றும் ஐம்பெரும் காப்பியங்கள் (சிலப்பதிகாரம் நீங்கலாக நான்கு) ஆகியவற்றை ஏனைய கோள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் ஒப்பிடலாம், ஞாயிற்றின் ஒளிக்கு முன்னே நட்சத்திரங்களின் ஒளி எவ்வாறு கண்ணுக்குத் தெரியாதோ, அவ்வாறே ஒளி வீசத்தக்க கருத்துக்களை அந்நூல்கள் தன்னகத்தே கொண்டிருந்த போதும் திருக்குறள் என்ற கதிரவன் முன்னே அவற்றின் ஒளி மிஞ்சுவதில்லை,

அடுத்தபடியாக இடைக்காலத்திலே தோன்றி, இன்றளவும் நம் வாழ்வை சீர்குலைத்து வரும் புராணங்களை மின்மினிப்பூச்சிக்கு ஒப்பிடலாம். மின்மினிப் பூச்சியின் ஒளியைக் கொண்டு யாரும் வழிநடக்க முடியாது. அதன் ஒளியை நம்பி வழிநடக்க ஆரம்பித்தோமானால் நிச்சயமாக நாம் குறிப்பிட்ட இடத்தை அடைய முடியாது. இருட்டிலே இங்குமங்குமாக இடர்பட நேரிடும். எனவேதான் கூறுகின்றேன். கதிரவனை நாடுங்கள். கதிரவன் இல்லாத போது திங்களை நாடுங்கள். இரண்டுமில்லாதபோது ஏனைய கோள்களையும் நட்சத்திரங்களையும் நாடுங்கள். ஆனால் மின்மினிப் பூச்சிகளை மட்டும் நாடாதீர்கள், நம்பி மோசம் போகாதீர்கள்.

தமிழர்களைப் பற்றியும், தமிழ் பண்பாடுகளைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும் உலகத்தார்க்கு எடுத்துரைத்த பெருமை—அறிமுகப் படுத்திய பெருமை—திருக்குறளையே சாரும்! பெரும்பான்மை மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் இல்லாவிட்டால் தமிழைப் பற்றி வெளிநாட்டார் அறிந்திருக்க முடியாது. தமிழைப்பற்றி அறிந்திருக்க முடியாது; தமிழ நாட்டைப்பற்றியும் அறிந்திருக்க முடியாது,

ஹிந்தி, சமஸ்கிருதம் போன்றமொழிகளை ஓர்ந்தியச் செம்மொழிகள் என்று மேலைநாடுகளிலே ஒரு காலத்திலே எண்ணப்பட்டு வந்தது. அந்த எண்ணத்தை மாற்றி தமிழே இந்தியாவின் தலைசிறந்தசெம்மொழிஎன இன்று அவர்கள் ஆராய்ந்தறியுமளவிற்கு திருக்குறள் அவர்களிடையே திகழ்ந்தது—திகழ்ந்து வருகிறது,

தமிழகத்தின் பொற்காலமாகிய சங்க காலத்திலே—பறம்பு மலையை ஆண்ட பாரிவள்ளல், பலருக்கும் பணத்தை வாரிவாரி வழங்கி வள்ளலானான். ஏறத்தாழ அதே காலத்தில் வாழ்ந்த இந்தப் பாவலனோபாக்கள் பாடிப்பாடிபாவள்ளலானான். மாவள்ளல் பாரி மறைந்த உடனே அவனுடைய கொடையும் மறைந்துவிட்டது. அவனுடைய புகழ் மட்டுமே எஞ்சி நிற்கிறது, ஆனால் பணத்தைக் கொடையாகக் கொடுக்காமல் பாக்களை கொடையாகக் கொடுத்த வள்ளுவரின் வள்ளன்மை அவர் மறைவுக்குப் பின் பத்தொன்பது நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் வாழ்கிறது. என்றும் வாழும். கதிரவனும் திங்களுமுள்ள காலமெல்லாம் வாழும்,

செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள்ளெல்லாம் தலை' என்று கூறினார். மனிதன் அடைய வேண்டிய செல்வங்களிலே தலையாயச் செல்வம் என்று கூறுகிறார். அவர் மாட்டையும் மற்றவைகளையும் தலையாயசெல்வமென்று கூறவில்லை, மண்ணைச் செல்வமென்று கூறவில்லை. பொன்னைச் செல்வமென்று கூறவில்லை. பணத்தைச் செல்வமென்று கூறவில்லை. பங்களாவைச்செல்வமென்று கூறவில்லை. காரை செல்வமென்று கூறவில்லை. இன்னபிறவற்றையும் செல்வமென்று சிறப்பித்துக் கூறவில்லை. அடைய வேண்டிய செல்வங்களிலே செவிச் செல்வமே சிறந்த செல்வமென்று கூறுகிறார். அறிந்தவர்கள் தாமறிந்தவற்றை உரைக்கும்போது அவற்றை அறியாதவர்கள் செவிமடுத்துக் கேட்பதுதான் சிறந்த செல்வம், தலையாய செல்வம் என்று கூறுகிறார்.

இந்தக் குறளையே செல்வத்துள் செல்வம் குறட் செல்வம் அச்செல்வம் செல்வத்துளளெலாம் தலை என்று மாற்றியமைக்கலாம். அதாவது மனிதன் பெறவேண்டிய செல்வங்களிலே முதலாவதாக குறளைப் படித்து அதன்வழி நிற்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இது தான் சிறந்த செல்வம், வள்ளுவத்தைப் பின்பற்றி வாழ்வாங்கு வாழ்பவருக்கு மற்ற செல்வங்களெல்லாம் செல்வங்களாகத் தென்படாது,

'செல்வத்துள் செல்வம் குறட் செல்வம் அச்செல்வம் செல்வத்துள்ளெல்லாம் தலை' என்றபடி வாழ்வதுதான் நாம் அந்த ஞாயிறனைய வள்ளுவனுக்கு செய்யும் கைம்மாறாகும். எனவே வள்ளுவன் வழிநடந்து வாழ்வாங்கு வாழ்வோமாக!

*

இறுதியாக தோழியர் ஆனந்தேஸ்வரிசுப்பிரமணியம் பேசியதின் சுருக்கம்

வள்ளுவன் சொல்லிய அறம்

திருவள்ளுவர் இன்றைக்கு இரண்டாரயிம் ஆண்டுகட்கு முன்னர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நெறியைத் தமிழர்கள் ஒழுகி வந்த அந்தக் காலத்திலே, ஆரியரின் பழக்க வழக்கங்கள் தமிழினத்தை சீர்குலைக்க முடியாத அந்தக் காலத்திலே—தமிழகத்தில் பிறந்தார். அவர் இல்லத்தை மேற் கொண்டு மனிதனின் மானத்தைக் காக்கும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

உலகிலே மக்கள் மக்களாய் வாழ வேண்டிய நெறிகளை வள்ளுவர் எடுத்துரைத்தார். அறத்தைப் பெரிதும் போற்றிய வள்ளுவர் அறம் என்றால என்ன என்றகேள்விக்கு அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கும் இழுக்காஇ யன்றது அறம்' என்று அழகாக ஆணித்தரமாகப் பதிலளிக்கிறார். நான்கும் இழுக்காது இயன்றது அறம் என்று கூறுகிறார். மற்ற மத நூல்களிலே பக்கம் பக்கமாகக் கூறப்பட்டிருக்கும் அறத்தை வள்ளுவர் இரண்டே அடிகளில் அழகாகக் கூறி விட்டார். இத்தகைய அற வாழ்வினைத்தான் பண்டைத் தமிழன் கொண்டிருந்தான்.

இன்றைய அணு குண்டு யுகத்திலே ஜலவாயுக் குண்டு சகாப்தத்திலே—அழுக்காறு அவா, வெகுளி இன்னாச் சொல் நான்கும் அறத்தை வேரறுத்து மறவாழ்வுக்கு சர்வ நாசத்திற்கு உலக மக்களை இட்டுச் செல்கிறது. இக் கொடுமையிலிருந்து மக்கள் தப்ப வேண்டுமானால் வள்ளுவன் வகுத்த சீரிய நெறியிலிருந்து தவறக் கூடாது.

உலகத்தில் அறம் தழைக்க வேண்டுமானால் அதற்கு இல்லறம் நல்லறமாகப் பொலிய வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார், வையத்தில் வாழ வேண்டிய நன்னெறிகளைக் கற்று அறிந்து உணர்ந்து ஒழுக வேண்டும் என்று வற்புறுத்துகிறார் வள்ளுவர். மனிதன் அடைய வவண்டிய பெரும் பேறு இதுதான் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

பெண்களைப் பற்றி வள்ளுவர், கற்பு நெறி பிறவாத மகளிர் தன் கணவனைத் தவிர வேறு தெய்வத்தைத் தொழ வேண்டாம் என்கிறார். அது மட்டுமல்ல தன்னைக் காத்து தன் கொழுநனையும் காக்கவல்ல அப் பெண் தெய்வம், வானை நோக்கி 'மழையே! பெய்! என்று கூறினால் மழை பெய்யுமாம். அவளுடைய கற்புக்கு அந்த அளவுக்கு ஆற்றல் இருக்கிறதென்று கூறுகிறார் இதோ அக் குறள்' தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை. இத்தகைய கருத்தை அறிந்து உணராத காரணத்தால் தான் நம் தமிழ் மங்கையர் கட்டுக் கெட்டுத் தடுமாறி தான்தோன்றித் தனமாக நடக்கின்றனர். பெண்ணினம் சீர்பட வேண்டுமானால்—கற்புநெறி போற்றப்பட வேண்டுமானால்—பெண்களே நாட்டின் கண்கள் என்ற பெருமை பெற வேண்டுமால் நம் தாய் குலம் வள்ளுவன் சொல்லை வாழ்க்கையில் ஒழுக வேண்டும்!

திருவள்ளுவர் சிறந்த அரசியல் நிபுணருங் கூட. அவர் அரசியலைப் பற்றி ஆராய்ந்து கூறியுள்ள கருத்துக்களையே பிற நாட்டு அறிஞர்கள் இப்பொழுது விரித்துரைக்கின்றனர் என்று கூறலாம் அவர் வாழ்ந்த காலம் குடியரசுக் காலமல்ல அரசன் ஆண்ட காலம். அவர் அரசனைப் பற்றிக் குறிப்பிடும் போழுது ஆண்டவனால் உரிமையளிக்கப் பட்டவன் என்று கூறிக்கொள்ளும் சர்வாதிகார அரசர்களைப் பற்றிக் கூற வில்லை, மக்களுக்காக மக்களால் நியமிக்கப்பட்ட மன்னனையே குறிப்பிடுகிறார், அரசன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு 'அறனிருக்கா தல்லவை நீக்கி மறனிருக்கா மானம் உடைய தரசு' என்று இலக்கணம் கூறுகிறார்,

இன்று ஜனநாயக ஆட்சிசர்வாதிகார ஆட்சி என்று கூறிக் கொண்டு ஆட்சி பீடத்திலே அமர்ந்து அறத்தைக் கைவிட்டு அக்ரம ஆட்சி நடத்துவதினால்தான் உலகிலே பல கொடுமைகள நிகழ்கின்றன. பஞ்சமும பட்டினியும் வாட்டுகின்றன. போரும் பூசலும் ஏற்படுகிறது. வர்க்க பேதமற்ற வாழ்வு மலர வேண்டுமானால் ஆள்வோர் அனைவரும் அறத்தை அரசியலில் புகுத்தி வள்ளுவன் வழிநடக்க வேண்டும். அப்பொழுதுதான் எளிதில் வாழ்வு மலரும்!

—தொகுத்தவர் : வி. எஸ். முருகன்

*

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்;

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தானா ரசியா

கௌதமன்

9—9—55 தொடர்ச்சி

4

இளவரசி ரசியா பேசுகிறுள் :

“இஸ்லாமிய பெருமக்களே! அன்பு கெழுமிய பெரியோர்களே! அரசியலுக்காக என் வாழ்வையே பாழாக்கிக்கொண்ட நான், இன்று அரச பீடத்திற்கு வெகு தூரத்திற்கப்பால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். ‘குடும்ப பாரமேற்று குலவிளக்காக, இயங்க வேண்டிய இவளுக்கு, அரச பீடமும் ஒரு கேடா!’ என்ற பிற்போக்கு எண்ணங்கொண்ட மகானுபாவர்களின் அருஞ் செயலால் இக்கதி நேரிட்டிருக்கிறது என்பதை நான்சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை! நாடறியும் இந்தப் புது நினைப்புக்காரர்களின் செயல்பற்றி!

தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு மேலிட்ட குழப்பத்திலே நாடு சிதையுறுமென்று அஞ்சியவருண்டு. அரண்மனையிலே திடீரெனக் குமுறியெழுந்த ‘மணிமுடிக் குழப்பம்’ நமது மாமண்டலத்தையே உலுக்கிடுமென்று எண்ணியவருண்டு. புரட்சி தோன்றும்—புதுமை பிறக்கும் — தந்தைக்குப்பிறகு என்று வாக்குறுதி தந்து அதால் மற்றவரை மயக்கியவருமுண்டு! ஆனல் கடந்துபோன மாதங்களிலேற்பட்ட மகத்தான மாறுதல்கள், இந்த எண்ண அலைகளுக்குச் சரியான அளவில் விளக்கங் கூறுமென்று நம்புகிறேன். நாடு முன்னேறி யிருக்கிறதா? அல்லது குழப்பத்திலே சிக்கி ஸ்தம்பித்து நிற்கிறதா? அல்லது பயத்தால் குமுறிக் கொண்டிருக்கிறதா! என்பதை என்னைவிட, உங்களைவிட இதோ இங்கு குழுமியிருக்கும் கொலுமண்டபக் காவலர்களே நன்கறிவர். மனசாட்சிக்கு விரோதமில்லாமல், எதற்கும் அஞ்சாமல், நடுநிலைமை வகிக்கும்! ஓம்ராக்களும்—மத குருமார்களுமாகிய உங்களுக்குக் கூட தெரியும். இந்த நான்கைந்துமாத ஆட்சிக் காலத்தில், அரசுரிமை பெற்ற வாரிசுக்காரர்கள், ஒவ்வொருவராக, அந்தப்புரத்திலே பிடப்பட்ட பலிபீடத்திலே வெட்டிச் சாய்க்கப்பட்டிருக்கின்றனர்.

நாட்டிலே அமைதியில்லை! சகிப்புத் தன்மையும்!—சரளமனோபாவமும், ஒரு சிறிதுமில்லாமல் அரசாங்க விரோதிகளென, நல்லவர்களெல்லாம் கூட ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கின்றனர். அதிலும் சிலபலர் மாய்த்தொழிக்கவும் பட்டிருக்கின்றனர்.

எனதன்புச் சகோதரர்களில் ஒருவர் வீணுக கொலை செய்யப்பட்டிருக்கிறார். அரசபீடம் பறிபோகுமென்ற அச்சம் அவர் உயிரைக் குடித்து விட்டது!

இன்று என் உயிருக்கும் உலைவைக்கப்பட்டிருக்கிறது. அந்தப்புரத்திலே என் அன்புத்தாய்!—அந்த புனித காரியத்தை தீவிர சதியால்; உருவாக்கிக் கொண்டு வருகிறாள்! இன்றோ—நாளையோ—அல்லது மற்றொரு நாளோ—என் சடலமும் துடித்து வீழக் காத்திருக்கிறது! ஆனல் நானிறப்பதைப் பற்றியோ—நான் கவலை கொள்ளவில்லை! அதுவல்ல எனக்குமுக்கியமாகத் தோன்றுவது! இப்பெரும் புவியில் பிறப்பவர் எவரும் என்றுவது ஓர் நாள் செத்துத்தான தீரவேண்டும்! பிறக்கும்போதே அவர் இறப்பெனும் நிழலைத் தழுவிக் கொண்டுதான் பிறக்கிறார்—அழுகிறார்! சாவும் மனிதரை நிழல்போலத்தான் தொடர்ந்து போகிறது! என்றுவது ஓர் நாள் மனிதப் பண்பும், உடல் வளமும், நிலைதவறிப் போய் விடுகின்றபோது, நிச்சயம் அவர் வீழ்ந்துதான் தீருவார். இது இயற்கை, மனித இனத்தின் சோகச் சித்திரமும் முடிவும்கூட இதுதான். ஆனல் இதற்காகவல்ல நான் வருந்துவது. ஒரு நாடு கிடைப்பதும் அதில், நல்ல பண்புகள் உலவுவதும், மக்கள் மகிழ்வதும், அவர்களினம் வீரம் கொண்டு பெருகுவதும், அவ்வந் நாட்டின் முடிமன்னனைப் பொறுத்துத்தானிருக்கிறது. நல்லவர்களை இவ்விஸ்லாமிய மண்டலம் போற்றித் தானிருக்கிறது—ஆனல் அதே நேரத்தில் கொடுமையாளர்களின் விழிகளைப் பறித்துத் தானிருக்கிறது! மமதையால் ஆட்சி செலுத்தியோரும்—சதியால் பிறரைக் கவிழ்த்துத் தாளை வேண்டுமென்றே வஞ்சகவலை வீசியோரும்—இறுதியில் ஏதுமற்றவராய் வீழ்ந்து போனதற்குச் சரிதம் தரும் சான்றுகள் ஏராளம்!

கஜினியும் —கோரியும் —தனிநாடும் புகழாட்சியும், பெருஞ் செல்வக்குவியலும் கண்டார்களென்றல், அவர்களுக்கு அந்த நேரத்திலே கிடைத்த அரிய சூழ்நிலைகள் தானிதற்குக் காரணம். அவர்களைப் போலவே நமதன்புத் தலைவர் குத்புதீனும், கொள்ளையிடும் தொழிலை இங்கு செய்வதோடு நின்று விட்டிருக்கலாம். திருப்தி யடைந்திருக்கலாம். அதிலே கிடைத்த வெற்றியோடே அவர் அகமகிழ்வும் கொண்டிருக்கலாம். ஆனல் புதிய நாடு நிறுவவேண்டுமென்ற ஆர்வம், அவருக்கிருந்த காரணத்தினுலேதான் இன்று அடிமை வம்சமே உண்டாயிற்று. இந்தக்கணம் வரையிலுங்கூட இந்த அடிமை வம்சத்தின் ஆளும் பீடத்திற்கு போட்டியும் பூசலுமிருக்கின்றதென்றல் அந்த அளவுக்கு அதை கவர்ச்சியுள்ளதாகச் செய்ததற்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள். தலைவர் குத்புதீனும், புதிய வம்சாவளியை தோற்றுவிக்க வேண்டுமென்ற யோசனையைத தனது மந்திரிப் பிரதானியர்களிடத்திலே தெரிவித்த போது அவர்கள் இது வேண்டாமரசே வீண் வேலை!— தேவையற்றது! என்று கூறிவிட்டிருந்தால்— இந்த எண்ணத்திற்கு ஆதரவு கொடுக்காமலிருந்திருந்தால் —நிலைமை என்ன ஆகியிருக்குமென்பதை சற்றே எண்ணிப்பாருங்கள், அடிமை வம்சமே தோன்றியிருக்காதல்லவா!—இந்துஸ்தானத்தின் வளமும், செல்வமும் எவர் பொக்கிஷத்திலோ தத்தளித்துக் கொண்டிருக்குமல்லவா! ஆனல் அவர்கள்—அந்த மந்திரிப் பிரதானியர்கள் — நல்ல தளபதிகள்—தன் தலைவரின் யோசனையை ஏற்றதினுலேயே—அதற்காதரவு தந்ததினுலேயே —இன்று நல்லாட்சியோ—கோணலாட்சியோ—ஏதோ ஒன்று நடக்கிறதல்லவா...இதை யாராகிலும் மறுக்கமுடியுமா?

தொழுகைக்கு வந்திருக்கின்ற இந்த நேரத்திலே இதையெல்லாம் நான் ஏன் குறப்பிடுகின்றேனென்றல், ஒரு எண்ணம், அது நல்லதோ கெட்டதோ —வளருவதற்கும் ஆக்கம் பெறுவதற்கும் பெரிதும் காரணமாயிருப்பது அந்த மன்னனும் அவனைச் சேர்ந்துள்ள சூழ்நிலையுந்தான் என்பதைச் சொல்லவேதான். கஜினி பதினெட்டு தடவைகள் இவ்விந்திய உபகண்டத்தைத் துளைத்திருக்கிறார். அவருக்கு ஒருமுறையாகிலும் ‘இந்த நாட்டினை நீங்களே ஆளுங்கள்! ஆண்டுதான் பாருங்கள்.’ என்று சொல்ல அவரருகில் ஆளில்லாமற்போய்விட்டது அத்தகைய சூழ்நிலையே இங்கே உருவாகவில்லை. கிடைத்ததும் வாரிச்சுருட்டிக் கொள்ளத்தான் இங்கே ஆட்கள் கிடைத்திருக்கிறார்கள். பொன் வாத்தைக் கொல்லத்தான் அவர்கள் கற்றிருந்தார்களே தவிர; அதனை வளர்க்க அவர்கள் நினைக்கவில்லை. காரணம் சூழ்நிலைக் கோளாறுதான். மன்னன் கோரியின் நிலையும் இப்படித்தான். ஆனல் தலைவர் குத்புதீன் நிலை அதுவல்ல. அவரின் சூழ்நிலையிலே மறுமலர்ச்சி ஏற்பட்ட காரணத்தினுலேதான் இஸ்லாமிய ஆட்சி இங்கேயும் பரவலாயிற்று. விண்ணுயர் கோபுரமும் பள்ளிவாசலும் இங்கேயும் எழமுடிந்தது. நாடும் நல்லாட்சி மட்டுமல்ல; நற்பயனும் பெற முடிந்தது.

சூழ்நிலையின் கோளாறு அல்லது ஆதரவுதான், ஒரு சில மறக்க முடியாத சம்பவங்களையே சரிதத்தில் உருவாக்கி வைக்கிறது. அதுமட்டுமல்ல, ஒரு நல்ல சூழ்நிலை உருவாக வேண்டுமென்றல், தெளிவு மதியும் நுட்ப அறிவும் கொண்டவர்களே மன்னனருகில் உலவ வேண்டும். நல்ல நேரத்தில் யோசனை கூறவேண்டும். உபதேசிக்க வேண்டும்! அதைப் போலவே கொடுமையும், சுயநலக் கோலாகலமும், தாறுமாறு நிகழ்ச்சிகளும், நிகழ வேண்டுமேயானல் கடமையற்ற ஒரு சிலரின் கட்டுக்கோப்பும், உணர்வற்ற சபல புத்திக்காரர்களின் எதிர்முகாமும் அமைவதால்தான். இதைத்தான் நான் கேடுதரும் சூழ்நிலை என்று குறிப்பிடுகின்றேன். நானிப்படி குறிப்பிடுவதால் தயவு செய்து யாரும் தவறுகக் நினைத்திடலாகாது.

நான்எதையும் தெளிவாகவும் கொஞ்சம் கண்டிப்பாகவும் கூறிடும் பண்பு பெற்றிருக்கும் காரணத்தினுலேதான் இன்று முடியிழந்து நிற்கிறேன். ஆனலும் நாட்டின்நன்மையை முன்வைத்தும் மக்களின் சுக வாழ்வை முன்னிட்டு எனதருமைத் தந்தை எனக்களித்த அனுபவத்தை முன்வைத்து நான் எதையும் சொல்லாமலிருக்க முடியவில்லை. இன்று நாட்டிலே ‘அராஜகம்’ நடக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. இதற்கு ஆளும் பீடம் மட்டும் பொறுப்பானதல்ல —ஆன்மிக்கும் பீடமும் கூடத்தான இதற்குப் பொறுப்பானவர்கள்—காரணம் நான் சொன்ன நல்ல சூழ்நிலை இங்கே அமையவில்லை!! நானிப்படிக் கூறுவதால் பகிரங்கமாக மந்திரிப் பிரதானியரை குற்றம் சாட்டுவதாக எவரும் நினைத்துவிடக் கூடாது, நல்ல சூழ்நிலையை வளரவிட மன்னராலேயே முடியவில்லை. சுயசுகநினைப்பும், சதா அவருள்ளத்தை வாட்டிக் கொண்டிருப்பதால்!

அதைப்போல ஏனே தானே நினைப்பும், தன நிலை காத்துக்கொள்ளும் பண்பும் அவரைச் சூழ்ந்துள்ளோரிடையே வளர்ந்துவிட்டதால் எவரும் மன்னனின் வெறியாட்டத்தைக் கண்டிக்க முன்வரவில்லை; கண்டிக்க முன் வந்திருந்தால் புதிய ஆட்சி துவங்கிய நான்கைந்து மாதங்களுக்குள்ளாக வெளிநாட்டிலே, குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட்டிருக்காது. அந்தப்புரம் பலிபீடம் அமைத்திருக்காது! ஆளும் வாரிசுரிமை பெற்றவர்கள் அந்த பலிபீடத்திலே சாய்க்கப்பட்டிருக்க மாட்டார்கள். அரசாங்கத்தின் கோட்பாடுகளுக்கு மாறனவர்களுக்கெல்லாம் வைரிகளென்றபேரால் மரணம் பரிசாகக் கிடைத்திருக்காது. ஒரு குழந்தை தவறு செய்தால் பெற்றோர்கள் கண்டிக்கக் கடமைபட்டவர்கள். ஒரு மகன் தவறு செய்து கொண்டிருந்தால் அதைக் கடமையுணர்ச்சியுள்ள பெற்றோர்கள், அவர்கள் எந்த வயதை எட்டி யிருந்தாலும் கண்டிக்காமலிருக்க மாட்டார்கள். ஆனல் இன்றைய சூழ்நிலையில் என் தாயிடம் அந்தப்பண்பு இல்லை’ மகனை அவர் கண்டிக்க முன்வரவில்லை. அதற்கு முற்றிலும் மாறுக அவரை ஊக்குவிக்கத்தான் அவர்கள் கிளம்பியிருக்கிறார்கள். முழுமூச்சாக அவரை சர்வாதிகார போதை கொண்டவராக ஆக்குவதிலேதான் அவர்கள் தங்களின் கைத்திறமையைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்’

கிடைக்காத அரசபீடம் எப்படியோ—யார் தயவிலோ கிடைத்துவிட்டிருக்கிறது! இதைப் பறி கொடுத்துவிடக் கூடாது என்ற எண்ணம், அவரைப் பல முறைகளையும் கையாள வைத்திருக்கிறது! நாட்டைப்பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை! அதன் நடைமுறைகள் எப்படிப் போனலும், அவர்களுக்கு அக்கரையில்லை! மக்கள் வாடினலும் மாமன்றம் சீர்குலைந்தாலும், அவர்கள் வருந்த மாட்டார்கள், அவர்களுக்கு முக்கியமாகத் தெரிவதெல்லாம்—கிடைக்காத அரசபீடம் எப்படியோ கிடைத்து விட்டிருக்கிறது — அதைச் செய்யாவிட்டால் மணிமுடி இடறி விழும் — அல்லது — வீழ்த்தப்படும்! இதுதான் அவர்களுக்குள்ள பயம்! ஆனல் அதுவா நமக்குள்ள கடமை! போரிட்டுப் பெற்ற பெருநிலத்திலே குழப்பத்தை உலவ விடுவதுதான அதன் சொந்தக்காரர்களின் கடமை!

புனிதக் கொள்கையும், அன்பு மதமும், அறிவுமக்களும், நிரம்பியுள்ள நாட்டில்—வயோதிகர்களும், வைதீகர்களும், மதத் தலைவரும் குழுமியுள்ள நாட்டில்—அநீதியைக் கேட்க ஒருவர் கூடவா முன்வரமாட்டார்! நமதன்புப் பிரதானியர்கள்தான் இதுவரை வாளாயிருந்து விட்டனர்; மன்னனைக் கண்டிக்க முன் வரவில்லை. அவர் போக்கு தவறு என்று எவரும் அவருக்கு அறிவுரை பகரத் துணியவில்லை. அவர் மதியிலே நல்ல சூழ்நிலையை வளரவிட இவர்கள் துணை செய்யவில்லை. அதன் பலன் இன்று நாட்டிலே கொந்தளிப்புக் கிளம்பி யிருக்கிறது. எனதுயிரையே அள்ளிக்கொண்டு போகின்ற அளவிலே இது வளர்ந்திருக்கிறது! நமது பெருமைக்குரிய மதத்தலைவர்கள் புதிய மன்னனை பல வாரிசுகளுக்கிடையே பிரசடனப் படுத்தினர்களே தவிர அதற்கேற்ற வண்ணம் அந்தப் புதிய மன்னர் நடந்து கொள்ளுகிறாரா என்று அவரின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கத் தவறிவிட்டார்கள்! ஓம்ராக்களும் பிரபுக்களுங்கூடத்தான் அதிலே அக்கரை காட்டவில்லை! அதன் பிரதிபலன் —இன்று வாரிசுகளின் வம்சாவளி குறைந்து கொண்டே வருகிறது! எனதன்புச் சோதரர் வீழ்த்தப்பட்டார்—நெஞ்சம் குமுறுகிறது இதை நினைக்கும் போது! உள்ளம்பகீரென்கிறது; இன்று என்னையும் இந்த மகானுபாவர்கள் குறிவைத்துச் சுற்றித் திரிகிறார்கள்! நானிறப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை, இவர்களாக என்னைக் கொல்லுமுன் மறைந்த என் அன்புத் தந்தையைப்போல ‘இறப்பை’ என்னுலேயும் அணைத்துக் கொள்ள முடியும்! தந்தையார் கட்டிக் காத்த இந்த மகத்தான சாம்ராஜ்யமும் அதன் பாதுகாவலர்களும் இன்று என் தந்தையின் விருப்பத்திற்கு மாறுக — அவருக்களித்திருந்த வாக்குறுதியையும் உதறித்தள்ளிவிட்டு மணிமுடியையே பறித்துக் கொண்டிருக்கிறார்களென்றல் — பறித்துக் கொள்ள துணை செய்கிறார்களென்றல் —அதே எனதன்புத் தந்தை கட்டி முடித்த இந்த விண்ணுயர் கோபுரமும் என் உயிரைப் போக்கிக் கொள்ளவா வது துணை செய்யாமலா போகும்!

மேலும் நானொரு பெண். இஸ்லாமிய முறைப்படி, அல்ல—அல்ல உங்களின் விருப்பப்படி ஆளத்தகுதியும் உரிமையும் பெற்றில்லாதவள். (தந்தை குவாலியரின் மீது படைகொண்டு சென்றிருந்த நேரத்தைத்தவிர!) ஆனல் எனக்குப் பிறகு இந்த நாட்டில் இத்தகையதோர் நிலைமை இருக்கலாமா; இருக்கவிடுவது நல்லதா! பொறுமையும் மாண்பும் கொண்ட எனது இஸ்

11-ம் பக்கம் பார்க்க

மக்களது தொண்டினுக்கே ஏடு வேண்டும்

இந்நாட்டில் பத்திரிக்கை வடிவில் தோன்றும்
எண்ணற்ற ஏடுகளைக் கண்டு விட்டோம்
உன்னாட்டில் உலவுகின்ற ஏட்டின் தன்மை,
உள்ளபடி உரைக்கின்றேன் ஓர்ந்துகாணீர்!
தென்னாட்டில் நிகழுகின்ற ஏடு வெல்லாம்
தெளிவின்றிப் பலகருத்தை உணர்த்தக்கண்டோம்
பொன்னேடாய்ப் புதுக்கருத்தைப் போற்றும் ஏடு
பொலியுமொரு நாள்தானும் வருவ தென்றோ?

ஏடெழுதும் ஆசானின் இயல்பைப்பார்த்தால்
இந்நாட்டில் அவர்எழுதத் தகுதி யுண்டா?
பாடெல்லாம் பணஞ்சேர்த்த லன்றி மற்றுப்
பகுத்தறிவைப் பண்பாட்டை வளர்ப்ப துண்டா?
நாடெல்லாம் அவர் ஏட்டை நாளும் போற்ற
வீடெல்லாம் அவர்ஏடு விளங்க வேண்டின்
வேற்றுமையை அடியோடு விலக்கல் வேண்டும்,

தாய்மொழியின் பெருமையினைப் போற்றும் ஏடு
தமிழகத்தின் பொன்னுன சிறந்த வேடு
ஆய்வுடனே அருங்கருத்தை யள்ளி வீசின்
அவ்வேடு சிறப்புறுதல் அழகாய்க் காண்போம்
நாய்கூட நம்நாட்டில் நல்லோர் தீயோர்
நாடியே அறிவதனை நாமும் கண்டோம்
சேய்போல மற்றவரை நினைத்தல் வேண்டாம்
சிறப்புடையார் எவ்ரேனும் போற்றல் வேண்டும்.

மக்களது தொண்டினையே மனத்திலுன்னி
மதிக்கின்ற பலவேடு தோன்றல் வேண்டும்
எக்கணமும் மொழித்தொண்டு இனத்தின் [தொண்டு
எழுச்சியுடன் போற்றுகின்ற சிறந்த வேடு
பக்கமெல்லாம் சிறந்துவிட்டால் பாரில் நாமும்
பண்புடனே உயர்வதிலே பழுதே யில்லை
இக்கருத்தை எண்ணுகின்ற எந்த ஏடும்
எழிலான நடைபோட்டு எங்குந்தோன்றும்.

நண்பர்கள்தான் நம்மேட்டில் எழுதல் வேண்டும்
நாட்டிலுள்ள சிறந்தவர்க்கவ்வாய்ப்பு வேண்டாம்
பண்புள்ள எழுத்தாளர் நம்ம வேட்டால்
பாரிலுள்ள மக்களுளந் தொட்டா ரென்றால்
நண்பர்களும் நம்மவருஞ் சிறத்த லுண்டோ?
நம்மவரால் அவரன்றோ சிறப்பா ரென்று
எண்ணுகின்றார் ஏடெழுதல் சிறப்ப தாமோ?
எல்லோரும் அவ்வுண்மை இலங்கக் காண்பீர்!

மொழிவளர்ச்சி கலைவளர்ச்சி யாரா லுண்டு
முயன்றுவருந் தமிழ்த்தொண்டு என்று லென்று
அழிவளர்ச்சி செய்துவரும் அயலார் ஏடு
அகற்றுவதாம் பெரும்பயனை அறிந்து விட்டால்
தொழில்வளமும் கலைவளமும் தோற்றம் பெற்றுத்
துயரமின்றித் தமிழ்நாட்டில் துலங்க லோடு
இழிவான செயல்தானும் இந்த நாட்டில்
இன்றோடு அழிந்தொழிந்து இலங்கக் காண்போம்.

திங்களிதழ் கிழமையிதழ் பலவுங் கண்டோம்
திகழுமிதழ் எவையென்று செப்ப வேண்டும்?
உங்களது உளந்தொட்ட தேவையே யென்றால்
ஒருசிலவாம் ஏடுகளே உண்மை; உண்மை,
எங்களது ஏடென்றால் மொழியைப் போற்றும்
இயல்பான பண்பாட்டை எடுத்துக் கூறும்
மங்காது ஏடெல்லாம் மலிய வேண்டின்
மாண்புள்ளார் தமிழேட்டில் எழுதல் வேண்டும்.

தன்னிடத்தில் ஏடுள்ள தகுதி யுன்னித்
தக்காரைக் குறைகூறி எழுதக் கண்டோம்
மன்னுலகில் மறுப்புரைக்கு ஏடு வேண்டாம்
மக்களது தொண்டினுக்கே ஏடு வேண்டும்
தென்னைமரம் மக்களுக்குச் செய்யுந் தொண்டைத்
திறமையுடன் புகழாத மக்க ளுண்டோ?
அன்னைமொழி தமிழினையே அழகாய்ப் போற்றும்
அரிய பல ஏடுகள்தான் தோன்றல் வேண்டும்.

இக்கருத்தை யெண்ணுதார் இந்த நாட்டில்
ஏடெழுதும் நிலைதனையே தடுத்தல் வேண்டும்
பக்கமுள்ள சிப்பந்திச் செயல்கள் தன்னைப்
பக்கம்பக்க மெழுதிவிட்டால் படித்தல் யாரோ
செக்கினிலே ஆட்டிவரும் எண்ணெய்ப் போலச்
சிறப்பாக எழுதுவரைப் போற்றல் வேண்டும்
மக்களது உளந்தொடுவா ரெவரென்றாலும்
மாண்புள்ள எழுத்தாள ராவரன்றோ!

கண்ணினையே கவருகின்ற முகப்பு அட்டை
கருத்திற்கு விருந்தளிக்கா எழுத்து ஏட்டை
மண்ணினிலே நாமதித்தால் மாண்பாம் ஏடு
மதிப்புறுநாள் வருவதென்றோ மனதில் கொள்வீர்
எண்ணத்தை மக்களுக்கு எடுத்துக் கூற
எளிதான நடையினிலே எழுதும் ஏடு
பண்ணோடு இசைபாடும் பண்பு வேடாம்
பாரினிலே அவ்வேட்டைப் போற்றி வாழ்க!

புலவர் சி. உண்மை ஒளியான்.

லாமியப் பெரியோர்களைக் கேட்கி றேன்! நேர்மை எண்ணங்கொண்ட நல்லறிஞர்களைக் கேட்கிறேன்! ஆனால் வீரமும் ஆண்மையும் கொண்ட கலீ ஃபாக்களைக் கேட்கவில்லை! களம்பல கண்ட அடலேறுகளை நான் கேட்க வில்லை. படை வீரர்களைப் பார்த்து நானிவைகளைக் கேட்க விரும்பவில்லை! அவர்கள் உள்ளம் எனக்குத் தெரியும். அவர்களின் நெஞ்சக் குமுறலை நானறி வேன்! இளவரசி ரஸியாவின்பால், அந்த என் அன்புச் சோதரர்கள் காட்டும் கனிவும் இரக்கமும் எனக்குத் தெரியும். அவர்களின் அன்பையும் நன் றியறிதலையும் நான் மனமார உணரு கின்றேன்! ஆனாலும் புரட்சியை நான் விரும்பவில்லை! புரட்சித் தொழிலில் நானவர்களை ஈடுபடுத்த விரும்பவில்லை. என்னாலே நாடு களமாகக் கூடாது. என் வாழ்வு போகட்டும்—அப்போதா கிலும் இப்பொன்னாடு சீராகட்டும்.

தந்தையாரிருக்கும் வரையில் எனக் குக் குறை யிருந்ததில்லை. அப்படி யிருந் தாலும் அவரிடம் முறையிடுவேன். ஆனால் இன்று எவரிருக்கிறார்கள்! உங் களை நம்பி வந்த இடத்திலே—நீங் களோ பேசவில்லை! இவ்வளவு நேர மாக என் குறைகளைச் சொல்லியும் உங்களிடமிருந்து எந்த ஓர் பதிலையும் காணோம். இதிலிருந்து நீங்களும் என்னை விரும்பவில்லை என்று உணருகின்றேன். எனக்கிருந்த கடைசி சாதனமாம் இந்த பள்ளிவாசலும் என்னைக் கைவிட்டுவிடு மாயின் நானிந்த இஸ்லாமிய மண்ட லத்திலே ... இருந்தே ... பயனில்லை... தயவு செய்து எனக்கு விடைகொடுங் கள்...! நான் போகிறேன்!

இளவரசியார் வீணாக வருந்துகிறார் கள்!

நாங்களிருக்கும் வரையில் இளவரசி யார் வருந்தத் தேவையில்லை!

இளவரசியாருக்கு நாடு கிடைக்கும். அதற்கு நாங்களும் உதவுவோம்!

ஆமாம்! கொடுமையை வீழ்த்த பள் ளிவாசல் நிச்சயம் உதவும்!

*

மக்கள் குரல் கிளம்பியது இப்படி! ரஸியா வெற்றி பெற்றுவிட்டாள்! தொழுகைக்கு வந்த மக்களைப் பேச் சால் கவர்ந்துவிட்டாள் அந்தப் பேரின மங்கை!

(தொடரும்)

பஞ்சாபில் மூன்று நாட்கள்...தொடர்ச்சி

Vaisya, no Kshatriya, ne Sudra! All are men and men only!

"ஆயிரம் உண்டிங்கு சாதி அன்னியர் வந்து புகலென்ன நீதி?" —பாரதியார்.

அதாவது : Thousands of Castes are there here! But What right have the foreigners to invade our country?

சந்த்ராம் : That is no argument, That is the very root Cause for the foreign invation! (வாதம் சரியன்று என்றார்.)

நான் : அதற்கு எங்கள் புரட்சிக்கவி பாரதிதாசனே பதில் கூறி யிருக்கிறார். பாருங்கள்.

"வாழ்கின்றார் முப்பது முக்கோடி மக்களென்றால், சூழ்கின்ற பேதமும் அந்த தொகையிருக்கும் —'ஆகையால் எல்லோரும் அங்கே தனித்தனிதான், ஏக மனதாகி அவர் நம்மை எதிர்ப்பது எங்கே?

அதாவது : When the population of India is 33 Crores, the distinctions and differences prevaleut amoung the Caste Hindus are no less than that figure. That is to say they are separated on Castes and there prevails no Unity at all. In sueh state of affairs how can they check or defend our invation?

The Caste system is the key for the forigners to invade.

சந்த்ராம் : Quite! Quite! (என்று பாரதிதாசனைப் பாராட்டினார்.)

அதோடு 'பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை, இந்தப் பிழை நீக்குவதே உயிருள்ளாரின் கடமை'—'பஞ்சமர், பார்ப் பனர் என்றெல்லாம், பாரத நாட்டுப்பழிச் சின்னத்தின் பெயர்' என்ற பாரதிதாசன் கவிகளையும்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை [யான்"

என்ற குறளமுதையும் விளக்கிக் கொண்டி ருக்கும் போது, இரண்டு சைகிள்களை வெளி யில் நிறுத்தி விட்டு ஹேத்ராம் உள்ளே நுழைந்தார்.

அதற்குள் சந்த்ராம், நம் உரையாடலை இங்கே நிறுத்தி வைப்போம்! நீ ஹேத்ராமு டன் ஹோஷியார்பூர் செல்! நீண்ட நேரம் ஆய்விட்டது! அங்கே நீ கவர்ந்து கொண்டு விட்ட பிகாரிலாலும், தக்கர்தாசும் உனது வரவை எதிர் நோக்கிக் காத்துக்கிடப்பார் கள். சீக்கிரமாகப் போங்கள் என்றார்!

சந்த்ராமிடம் விடைபெற்றுக் கொண்டு சைகிளில் ஏறினோம் ஹேத்ராமும் நானும்.

அட! படா, ஸ்டைலாகவும், அலட்சிய மாகவும், வேகமாகவும் சைக்கிள் விடுகிறீர் களே!—இது ஹேத்ராம் சர்ட்டிஃபிகேட்! சைகிளில் போகிறோம்! பிற அடுத்து.

புரிந்த லட்சணம்!

"ஐக்கிய நாடுகள் சங்கம் மொழி பெயர்ப்பதற்காகத் தேர்ந்தெடுத்த சிலப்பதிகாரமென்னும் தமிழ்ப் பெருங் காவியத்தை இயற்றிய ஆசிரியர் யார் என்று கூட அறியாதவர்களிடம் ஆங் கிலத்தில் நூல் எழுதும் பொறுப்பை இந்திய அரசாங்கம் ஒப்படைத்திருக் கிறது! சிலப்பதிகாரமென்னும் முத் தமிழ்க் காப்பியத்தை இயற்றியவர் சேர அரசன் செங்குட்டுவனது இளைய உடன் பிறப்பாளராகிய இளங்கோ அடிகள் என்ற துறவி என்பதை ஒவ் வொரு பள்ளிச் சிறுவனும் அறிவான். ஆனால் இந்திய அரசாங்க நூலாசிரியர் கள் "சிலப்பதிகாரம் ஒரு பாண்டிய அரசனால் தமிழில் எழுதப்பட்ட புகழ் வாய்ந்த நூல்" என்று தெரிவித்திருக்கி றார்கள். இந்திய அரசாங்கச் செய்தி வானொலி இலாகாவின் வெளியீட்டுப் பிரிவு இயற்றிய 'தென்னிந்தியாவின் வழிகாட்டி' (கைட்டு சவுத் இந்தியா) என்ற ஆங்கில நூலின் 46-ம் பக்கம், 23-24-ம் வரிகளில் இப்பொருள் கொண்ட சொற்றொடர் காணப்படு கிறது. இதை ஏன் நாம் இங்கு குறிப் பிடுகிறோம் என்றால், இத்தகைய "வல் லுனர்"களிடம் மொழி பெயர்ப்புப் பணியை ஒப்படைக்கக் கூடாது என்ப தை வற்புறுத்துவதற்காகவே!"

'தமிழ்நாடு' உபதலையங்கம்

★

திராவிடப் பூங்கா

"அந்தைநேவேள்"

கழக மணி!

வீர உணர்ச்சியும், நெஞ்சுத்துணிவும், ஆற்றல் மிகுதியும் உடைய ஆயிரமாயிரம் இயக்கத் தொண்டர்களை, திராவிடத்தின் தந்தை பெரியார் அவர்கள் " என தருமை ஜீவரத்தினங்களே' என அகமகிழ அழைப்பதைக் கேட்டிருக்கிறோம். திராவிடத் தளபதி அறிஞர் அண்ணா அவர்களும் 'வீர ஒலி எழுப்பும் சிங்கங்காள்! துள்ளுங்காளைகாள்!' என்று தொண்டர்களை வாழ்த்தியதையுங் கேட்டிருக்கிறோம்.

அத்தகு சிறப்பு வாய்ந்த மெய்த் தொண்டர்கள் ஏராளம்! நமது இயக்கத்தில்! அவர்களே இத்திரு நாட்டின் மணிகள்! விலைமதியா மாணிக்கங்கள்! ஆம்! கழக மணிகள்!

சொல்லின் வல்லமை! செயலின் தீரம்! ஆற்றலில் திறமை! அக்கழக மணிகளின் சிறப்பு!

"கல்லாடத்திடம் மல்லாடாதே"—"கல்லாடம் படித்தவனிடம் சொல்லாடாதே"—என்பவை கல்லாடம் என்னும் நூலைக் கொண்டெழுந்த பழமொழிகள்.

யாமும் இவண் கூறுவோம் : கழகத்தாரிடம் வழக்காடாதே! சுயமரியாதைக்காரரிடம் மரியாதை கெட்டுப் பேசாதே!

ஏன்? கழகத்தார் என்றதுமே, கண்யத்தைக் கண்ணெனப் போற்றுபவர்! கட்டுப்பாட்டைக் கெட்டிப் பிடி பிடித்து ஒழுகுபவர்! கடமையை எக்காலமும் மறவா மறத் தமிழர்!—என்றுதான், (பொறுமைக் கண் படைத்தோர் நீங்கலாக) மற்ற ஏனையோரும் நினைந்து மகிழ்கின்றனர், நன் மதிப்புக் கொள்கின்றனர்! வளர்க அம்மகிழ்வும், மதிப்பும்! அதேபோது அம்மகிழ்வும், மதிப்பும் ஏனைய மக்களிடமும் மண்டித்தவழ, அண்ணா முழங்குவதைப போன்று கண்யத்தையும் கட்டுப்பாட்டையும், கடமையையும் செவ்வனே ஒழுகி, கழக மணிகள், குன்றின் மேலிட்ட விளக்கன்ன ஒளிவீசித் திகழ்வார்களாக! ஏனைய மக்களுக்கும் முன்னோட்டிகளாக நடை எடுப்பார்களாக!

கழகத்தவர், ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை எப்போதும் சிந்தையில் தேக்கி வைத்து "எப்பொருள் யார், யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்னும் குறளோவியத்திற் கொப்ப பகுத்தறிவை ஓம்பும் பண்பினர்!

அத்துடன் "எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதை நினைவில் கொண்டு பொருள்களின் தன்மையுணர்ந்து செயலாற்றும் செம்மல்கள்!

உண்மை உணர்வதிலும், உண்மை உரைப்பதிலும், உண்மை அற்றனவற்றைத் தெற்றெனக் காட்டுவதிலும்—நீங்காப் பற்றுள்ள அஞ்சா நெஞ்சர்கள்!

கல்லைக் கடவுளெனக் காட்டி காசு பறிக்கும் கயவர்களை சந்தியில் வைத்துச் சாடுபவர்கள் கழகத்தார்!

கல்லைக் கடவுளென நம்பும் கபோதித் தன்மையைக் களைந்து, எது கடவுளென விளக்க உரை பகர்வர் கழகத்தார்!

அன்பே கடவுள்! அறமே கடவுள்! உண்மையே கடவுள்! பிற உயிரைத் தன்னுயிர் போல் நினைத்து தன்னல மறந்து மக்கள் சேவை செய்தலே கடவுள் வழிபாடு—என்று தெளிவு உரை பகர்வோர் கழகத்தார்!

கோயில் ஓர் இருட்டறை! கள்ளர் குகை! வேசையர் விடுதி! அங்குதான் அறிவு மங்கி மழுங்கும் என ஆதாரபூர்வமாக அறிவுரை வழங்குபவரும் கழகத்தாரே!

அறிவையும், பொருளையும், பொன்னான உழைப்பையும் அபிஷேகத்தின்பாற் செலுத்தாதே! அவைகளை உயிருள்ள—அவ்வுயிருக்கு மன்றாடித் தத்தளிக்கும்—மக்களுக்கு வழங்கு!—வழங்கி நற்பணி செய்!—அவர்களை வாழவை! அதுவே ஆண்டவன் கட்டளை எனக் கொள்! என போதிப்பவர் கழகத்தார்!

சாணிக்கும், செங்கற்களுக்கும் பொட்டிட்டுச் சாமியென்பார் செய்கைக்கு நாணச் செய்து உண்மை விளக்கம் அளிப்பவரும் அவரே!

முடை நாற்றம் வீசுகின்ற மூடத் தனத்தை விரட்டி யடிப்பவரும் அவரே!

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்—என்னும் வள்ளுவர் வாய்மொழியை வையகமெல்லாம் வாரி யிறைப்பவரும் அவரே!

மானமிழந்து மாற்றான் காலில் மண்டியிடும் இழிச்செயலை இடித்துக் காட்டி தன்மானம் ஊட்டுபவர் யார்? திராவிட கழகத்தார்!

உண்பதில், மணங் கொள்வதில் ஒற்றுமை பேணுவதில், சாதிப் பிணக்கைச் சாபக்கேடு" என்று ஒதுக்கி இணைந்து வாழ விழைபவர் கழகத்தாரே!

உன் நாட்டை, தென்னாட்டை நற்திருநாட்டை, திருஇடத்தைப் பார்! அது அந்நாளில் அன்னியனுக்கு அடிமைப்பட்டதுண்டா? நம் மூதாதையர் கட்டி ஆண்ட நாடன்றோ நம் நாடு? அது ஏன் இன்று தேய்ந்தது? நம்வீரம் தேய்ந்ததோ? உணர்வு குன்றியதோ? எழுச்சி மங்கியதோ? பின் ஏன் பிறருக்கு அடிமையானோம் நாம்? மானத்தை இழக்கவில்லை! வீரத்தை விடவில்லை! உறுதி தளரவில்லை! எனின் ஏன் இழந்தோம் இத்திரு நாட்டை? இழந்ததை மீட்பதைவிட வேறென்ன பணி நமக்கு? கிளர்ந்தெழுவோம் இன்றே! மீட்டே தீருவோம் திருநாட்டை! திராவிட நாடு திராவிடருக்கே! திருநாடு இன்றேல்......காடு—என்று நாட்டுப்பற்றை கனவிலும், நினைவிலும் கொண்டுழைப்பவர் கழகத்தவரன்றோ?

நற்றாய் நடமாடும் நந்தமிழ்ச் சோலையிலே நச்சரவு நெகிழ்ந்துழலக் காண்போமா? கண்டுச் சகியோமா? என்று கண்ணுங் கருத்துமாகத் தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காத்து நிற்பவர் யார்? கழகத்தார் அன்றோ?

கலகமே வேண்டாத, தூண்டாத, அறநெறி வழிகளைப்பற்றி அறப்போர் செய்யத் துடிப்பு கொண்டோரே கழகத்தார்!

அத்தகு எழிற் கொள்கைகளையும், இலட்சியங்களையுங் கொண்ட கழக மணிகளை, ஈரமிலா வரண்ட, வயோதிக, வைதீக நெஞ்சத்தார் எவரோ ஒரிருவர் 'கலகத்தார்' 'காலிகள்' என்று தூற்றினார்களாம் ஒருகாலை! அவர் அறியாமைக்கு இரங்குவோம்!

ஞாயிறு ஓர் இருட்பந்து என்றிட்டாலே அது ஒளி யிழந்த களி உருண்டை—இருட்பந்து—ஆய்விடுமா?

பொறுமையின் பெட்டகங்கள் கழக மணிகள்!

" Let the dogs bark, the Caravan will pass on!"

என்று கூறிவிட்டு ஏறு! முன்னேறு! என்று பணியாற்றுபவர்கள் கழகத்தார்!

பகுத்தறிவுப் பாங்காளரே! சீர்திருத்தச் செம்மல்களே! சுயமரியாதைக் காளைகளே; திராவிட நாட்டு பண்பாடி மீட்கும் பணி கொண்ட கழகக் கண்மணிகளே! உங்கள் ஊக்கம் ஓங்கட்டும்! ஆக்கம் தழைக்கட்டும்! நாடு மீளட்டும்!

திராவிடன்

ஆற்றிவரும்

சீரிய தொண்டு

திராவிட நாட்டின் விடுதலைப் பணியில் திராவிடன் இதழுக்கு பெரும் பங்கு உண்டு என்பதை அனைவரும் அறிந்ததே யாகும் என்று கூறினால் தற்புகழ்ச்சி யாகாது. அதிலும் குறிப்பாக திராவிடன் 9-வது ஆண்டு துவக்கத்திலிருந்து புதிய அம்சங்களுடன் பொலிவுடன் பவனி வருகிறது. தோழர் மா. தங்கவேலர் எழுதும் பாலைவன ரோசா — புதிய பாதை—கருத்துக் கருவூலம்—உயிரோட்டம் நிறைந்த நடை. அனைத்தும் படிக்கப் படிக்க திகட்டாததாயிருக்கிறது,

திரு. திருவேடம் தீட்டும் பஞ்சாபில் மூன்று நாட்கள் கௌதமன், வந்தைவேள், திராவிடப் பித்தன் ஆகியோரின் கருத்தோவியங்கள் காலத்திற்கு ஏற்றவைகளாகும். இத்தகு சிறப்புடன் திராவிடன் இவ்வாண்டு மிடுக்கு நடை போடுகிறதென்றால் மிகையாகாது. மேலும் இதே நிலையில் செல்லல் வேண்டும் என்பதே என் அவா.

அன்பு

தங்க மாணிக்கம்

மூனியமுத்தூர்

பரிமளா—சுந்தரம்

கோவை திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழக அமைப்பாளர் இரா. சுந்தரம் — தோழியர் பரிமளா ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்தம் 12-9-55 காலை 9-30 மணிக்கு கல்லக்குறிச்சியில், தோழர். என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. ஏராளமான தோழர்கள் வந்திருந்து சிறப்பித்தனர், மணமக்களுக்கு வாழ்த்திதழ்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். நன்றி—நிர்வாகி.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை-1